**த. நா.ச.பே. எண் : 02** **நாள் :05.02.2021**

**சட்டமன்றத்தில் மாண்புமிகு ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K.பழனிசாமி அவர்களின் பதிலுரை – 5.2.2021**

**மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி,**

**மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே,**

**பெண்ணின் பெருந்தக்க யாவுள ?**
**பெண்ணைவிட பெருமைக்குறியது ஏதும் உண்டா ?**

கேட்டார் தெய்வப் புலவர் திருவள்ளுவர்.

**பெண் என்றால் தாய்,**
**பெண் என்றால் தெய்வம்,**
**பெண் என்றால் தியாகம்,**
**பெண் என்றால் உழைப்பு.**

**“ பெண்ணுக்குள் ஞானத்தை வைத்தான்**
**புவி பேணி வளர்த்திடும் ஈசன்”**

என்றார் **மகாகவி பாரதியார்.**

பெருமைக்குரிய பெண்மணியாக,
வணங்கத்தக்க தாயாக,
எடுத்துக்காட்டான தலைவியாக வாழ்ந்து,
எங்களை எல்லாம் வளர்த்து ஆளாக்கிய,
இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை
மனதார தொழுது, வணங்கி
**எனது உரையினை தொடங்குகிறேன்.**

**“வெற்றி நடைபோடும் தமிழகமே”** என்று நாம்,
மார்தட்டிச் சொல்லக் காரணமாக இருக்கும் –
மகத்தான சாதனைகளுக்கெல்லாம் –
அடித்தளம் இட்டவர் **புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள்.**

**“முதலிடம் நோக்கி – முன்னேறும் தமிழ்நாடு”**
என்று பார் புகழ ஆட்சி செய்தவர்
**இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.**

தெய்வமே பெண்ணாகி,
நம் புரட்சித் தலைவி அம்மாவாகி
தியாகத்தின் உருவாகி – இன்று
நமக்கெல்லாம் **"யாதுமாகி நிற்கும்"**
**புரட்சித் தலைவியின்** திருவுருவப் படத்திற்கு

என் இதயத்தோட்டத்தில் நாளும் பூக்கும்
நன்றி மலர்களை,
விசுவாசம் மிக்க பக்தனாய் சமர்ப்பிக்கிறேன்.

**மீண்டும் எங்கள் ஆட்சியே என்ற**
**உறுதி மொழியின் தொடக்கமாக**
**எனது உரை அமைவதில் மகிழ்ச்சியடைகிறேன்.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!**

மாண்புமிகு ஆளுநர் அவர்கள் இந்த மாமன்றத்தில் **2.2.2021** அன்று ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவித்து மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் Dr. V.P.B. பரமசிவம் அவர்களால் முன் மொழியப்பட்டு, மாண்புமிகு உறுப்பினர் திரு. P.M. நரசிம்மன் அவர்களால் வழிமொழியப்பட்ட இத்தீர்மானத்தின் மீது நடைபெற்ற விவாதத்தில் மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களது அரிய கருத்துக்களை தெரிவித்தும், பாராட்டியும் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் முதற்கண் என்னுடைய நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

**தமிழக மக்களிடம் நாங்கள் காட்டும் விசுவாசத்திற்கு கிடைத்த வெகுமதிதான், தமிழ்நாடு மக்கள் எங்கள் மீது வைத்த நம்பிக்கை – எங்களுக்கு அளித்த மகத்தான ஆதரவு – எங்களுக்கு அளிக்கப்பட்ட ஆட்சிப் பொறுப்பு.**

**"என்னை நம்பி வாக்களித்தவர்களுக்கு, நான் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதே என்னுடைய புனிதக் கடமையாகக் கருதுகிறேன். ஏழை எளிய மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற நான் ஒரு போதும் தவறியதில்லை" என்றார் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.**

மாண்புமிகு அம்மா அவர்களும், அவரைத் தொடர்ந்து, அவரது வழிகாட்டுதலின்படி செயல்படும் மாண்புமிகு அம்மாவின் அரசும், சொன்னதை

மட்டும் அல்லாமல், சொல்லாத பல மக்கள் நலத் திட்டங்களையும், செயல்படுத்தி, எங்களிடம் ஆட்சி பொறுப்பளித்த மக்களுக்கு ஏற்றமிகு வாழ்வினை நல்கி வருகிறோம்.

அதற்கு எடுத்துக்காட்டாக, சட்டமன்ற விதி எண் 110–ன் கீழ் மாண்புமிகு அம்மாவின் அரசால் அறிவிக்கப்பட்ட மொத்தம் 644 அறிவிப்புகளில், 607 அறிவிப்புகளுக்கு அரசாணைகள் வெளியிடப்பட்டுள்ளன. இதில் 198 அறிவிப்புகளுக்கான திட்டங்கள் முழுமையாக நிறைவேற்றப்பட்டுள்ளன. 409 அறிவிப்புகளுக்கான திட்டப் பணிகள் பெரும்பாலும் முடிவுறும் தருவாயில் உள்ளன. 31 அறிவிப்புகளுக்கு, திட்டப் பணிகளுக்கான ஆயத்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 6 அறிவிப்புகள் மத்திய அரசின் பரிசீலனையில் உள்ளது.

அதேபோல, டாக்டர் எம்.ஜி.ஆர் நூற்றாண்டு விழாவில் 32 மாவட்டங்களில் 568 அறிவிப்புகள் வெளியிடப்பட்டன. 566 அறிவிப்புகளுக்கு அரசாணைகள் வெளியிடப்பட்டன. அவற்றில் 289 அறிவிப்புகளுக்கான திட்டங்கள் முழுமையாக நிறைவேற்றப்பட்டுள்ளன. 277 அறிவிப்புகளுக்கான திட்டப் பணிகள் தற்போது தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. 2 அறிவிப்புகளுக்கான திட்டப் பணி தொடங்குவதற்கான ஆயத்த பணிகள் நடைபெற்று வருகின்றன என்பதை இப்பேரவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு அம்மாவின் அரசு பதவியேற்றது முதல் இன்று வரை 42 ஆயிரத்து 144 கோடியே 69 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 48 ஆயிரத்து 782 பணிகள் என்னால் துவக்கி வைக்கப்பட்டுள்ளன என்ற செய்தியை அவைக்கு மகிழ்ச்சியுடன் தெரிவிக்க விரும்புகிறேன். மேலும், 36 ஆயிரத்து 912 கோடியே 97 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 8 ஆயிரத்து 12 பணிகளுக்கு என்னால் அடிக்கல் நாட்டப்பட்டுள்ளன. ஆக மொத்தம் 79 ஆயிரத்து 57 கோடியே 66 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 56 ஆயிரத்து 794 பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பது இந்த அரசு மக்களின் தேவைகளை நிறைவு செய்ய எடுத்த நடவடிக்கைகளுக்கு ஒரு சான்றாகும் என்பதை மகிழ்ச்சியுடன் பேரவைக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,**

மாண்புமிகு அம்மாவின் அரசு, தமிழ்நாட்டு மக்கள் வாழ்வு உயர, அமைதி, வளம், வளர்ச்சி என்ற கோட்பாடுகளையும், தொலைநோக்குப் பார்வை 2023-ஐ அடிப்படையாகக் கொண்டும், பல்வேறு நலத்திட்டங்கள் மற்றும் வளர்ச்சித் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், மக்கள் நலனுக்காக, மாண்புமிகு அம்மாவின் அரசால் சரித்திர சாதனையாக செயல்படுத்தப்பட்ட திட்டங்கள் பல. அதே வேளையில், தமிழ்நாட்டு மக்களின் நல்வாழ்விற்காகவும், தமிழ்நாட்டின் வளர்ச்சிக்காகவும் மாண்புமிகு அம்மா அவர்கள் ஆற்றிய அரும்பணிகள், எடுத்த துணிச்சலான முடிவுகள், உன்னதமான மக்கள் பணிகள் ஆகிய அனைத்தும், தமிழ்நாட்டின் சமகால வரலாற்றில் பொன்னெழுத்துகளால் பொறிக்கப்பட வேண்டியவை. இத்தகைய மாபெரும் மக்கள் தலைவருக்கு மரியாதை செலுத்தும் விதமாக, மாண்புமிகு அம்மா அவர்களின் தன்னலமில்லா வாழ்விற்குப் பொருத்தமாக, மெரினா கடற்கரையில், மிகப்பெரிய நினைவு மண்டபமும், மாண்புமிகு அம்மா அவர்கள் குடியிருந்த கோயிலான **‘வேதா நிலையம்’** நினைவில்லமாகவும், மாண்புமிகு அம்மா அவர்களின் திருநாமத்தின் பெயரில் தமிழ்நாடு உயர்கல்வி மன்ற வளாகத்தில் மாண்புமிகு அம்மா அவர்களின் முழு திருவுருவச் சிலையும் நிறுவப்பட்டது. அதேபோல, அம்மா அவர்களின் சாதனைகளை இன்றைய தலைமுறையினரும், இனிவரும் தலைமுறையினரும் அறிந்து கொள்ளும் வகையில், சென்னையில் ஒவ்வொரு ஆண்டும், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பிறந்தநாளான பிப்ரவரி–24ஆம் நாளை அரசு விழாவாக கொண்டாட உத்தரவிடப்பட்டுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,**

மாண்புமிகு அம்மாவும், அம்மாவின் அரசும், மக்களுக்கு நலன் பயக்க மக்களை நாடிச் சென்று பல்வேறு நலத்திட்டங்களையும், நாடு முன்னேற்றமடைய

பல்வேறு வளர்ச்சித் திட்டங்களையும் செயல்படுத்தி, அரசாக செயல்பட்டு வருகின்றது. அதே நேரத்தில், தமிழ்நாட்டின் உரிமைகளுக்கு பாதிப்பு ஏற்படும் சமயங்களில், அதனை துணிந்து எதிர்த்து குரல் கொடுப்பதற்கும் தயங்காது, தேவையேற்படும் போது சட்டப் போராட்டங்களையும் நடத்தி, அதியமான் தனது நாட்டை காத்தது போல் தமிழர்களின் உரிமையை மீட்டு தந்து, தமிழ்நாட்டின் நலனை பாதுகாத்தது மாண்புமிகு அம்மா அவர்களும், அவரைத் தொடர்ந்து மாண்புமிகு அம்மாவின் அரசும்தான் என்பதை ஆணித்தரமான கூறிக்கொள்ள விரும்புகிறேன். காவேரி, முல்லை பெரியார் அணை, இருமொழிக் கொள்கை, ஜல்லிகட்டு போன்ற பல்வேறு பிரச்சனைகளில் தமிழ்நாட்டின் உரிமையை நிலை நிறுத்தியதே இதற்குச் சான்றாகும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!**

மாண்புமிகு அம்மா அரசின் தொடர் நடவடிக்கைகள் மற்றும் சட்டப் போராட்டத்தின் மூலமாக, தமிழ்நாட்டின் வாழ்வாதார பிரச்சனையான, காவேரி பிரச்சனையில், தமிழ்நாட்டின் உரிமையை நிலைநாட்டி, **காவேரி மேலாண்மை ஆணையம் மற்றும் காவேரி நதிநீர் முறைப்படுத்தும் குழு** ஆகியவற்றை அமைத்தது மாண்புமிகு அம்மாவின் அரசுதான் என்பதை இந்த நேரத்தில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

முல்லைப் பெரியார் அணையின் நீர்மட்ட உயரத்தை உயர்த்த சட்டப் போராட்டம் நடத்தி ஆணை பெற்றதும் மாண்புமிகு அம்மாவின் அரசுதான்.

காவேரி படுகையில் தொழிற்சாலைகள் அமைக்கப்பட்டால், தங்களின் விளைநிலம் பாலைவனமாகி, தங்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படும் என அச்சப்பட்ட டெல்டா விவசாயிகளின் அச்சத்தைப் போக்க, விவசாயியான எனது தலைமையில் செயல்படும் மாண்புமிகு அம்மாவின் அரசு, குறுகிய காலத்திலேயே

பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலத்திற்காக சட்டத்தினை இயற்றி, டெல்டா பகுதி விவசாய பெருமக்களின் வாழ்வாதாரத்தை பாதுகாத்துள்ளது. வேளாண்மையை பாதிக்கும் தொழிற்சாலைகள் டெல்டா பகுதிகளில் துவங்குவதை தடுக்க இந்தச் சட்டம் வழி வகை செய்யும்.

தமிழ்நாடு பெரும்பாலும் பருவமழையே நம்பியே உள்ளது. பல நூற்றாண்டுகளுக்கு முன்பே, தமிழ்நாட்டில் ஆற்று நீரைக் கொண்டு ஏரி, குளம், குட்டை, ஊரணிகளை நிரப்பி, பின்னர் அந்த நீர் குடிநீருக்காகவும், பாசனத்திற்காகவும் பயன்படுத்தப்பட்டது. இவ்வாறான பொறியியல் கட்டமைப்புகளை நமது முன்னோர்கள் கட்டமைத்து இருந்தனர். இதனால் நிலத்தடி நீர்மட்டம் உயர்ந்தது. ஆற்றை சுற்றியுள்ள கிராமங்கள் பாசன வசதி பெற்றன. நிரம்பிய ஒரு ஏரியிலிருந்து வெளியேறும் நீர், அடுத்த ஏரிக்கு பாயும் விதத்தில் கட்டமைப்புகளை ஏற்படுத்தினர். கல்லணை போன்ற சிறப்பான அணைகளை கட்டி, காவேரி ஆற்றை பாசன வசதிக்கு பயன்படுத்திக் கொண்டனர். இதே போன்று, பல நீர் நிலைகளை தமிழ்நாடு முழுவதும் ஏற்படுத்தி நீர் மேலாண்மையில் சிறந்து விளங்கினர்.

பொருளாதார வளர்ச்சிக்கு நீர் மேலாண்மை மிகவும் அவசியமானதாகும். நீர் மேலாண்மையின் முக்கியத்துவத்தை உணர்ந்த மாண்புமிகு அம்மா அவர்கள், மழைநீர் சேகரிப்பை ஒரு மக்கள் இயக்கமாக மாற்றினார்கள். தற்போது மாண்புமிகு அம்மாவின் அரசும், அவர்களின் வழியிலேயே, மழைநீர் சேகரிப்பை முன்னெடுத்துச் செல்லவும், நீர்நிலைகளின் கொள்ளளவினை அதிகப்படுத்தி பாதுகாக்கவும், வேளாண்மை நீர் திறம்பட பயன்படுத்துவதை உறுதி செய்யவும், கழிவு நீர் மற்றும் பயன்படுத்தப்பட்ட நீரினை சுத்திகரித்து மறுசுழற்சி முறையில் உபயோகிப்பதை பெருமளவில் ஊக்கப்படுத்தவும் **“நீர்வள ஆதார பாதுகாப்பு மற்றும் நீர் மேலாண்மை இயக்கம்”** என்ற ஒரு தீவிர மக்கள் இயக்கம் தொடங்கப்பட்டு, பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகிறது. இந்த இயக்கம் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள், மக்கள், அரசு சாரா நிறுவனங்கள், தனியார் மற்றும் தொண்டு நிறுவனங்கள் உள்ளடக்கிய மக்கள் இயக்கமாகவும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**பெருங்குளக் காவலன் போல**

**அருங்கடி அன்னையும் துயில் மறந்தனளே**

என்கிறது சங்க இலக்கியம். அதாவது மழையிலும், அடர்ந்த இருள் சூழ்ந்த நள்ளிரவிலும் ஏரியைக் காக்கும் காவலன்போல, குழந்தையை பாதுகாக்க அன்னை தன் தூக்கத்தை மறந்தாள் என்பது இப்பாடலின் பொருள்.

சிறு குழந்தையை தாயானவள் கண்ணை இமை காப்பது போல் காத்த செயலும், நீர்நிலைகளை காக்கும் செயலும் ஒன்றாகவே எண்ணப்பட்டு வந்துள்ளது.

மாண்புமிகு அம்மாவின் அரசு நீர்மேலாண்மைக்கு முக்கியத்துவம் அளித்து, ஒரு சொட்டு மழைநீர் கூட வீணாகக் கூடாது என்ற கொள்கையின் அடிப்படையில், நீர்நிலைகளை தூர்வாரி, புதிய நீர்நிலைகளை உருவாக்கியும், நீர் நிலைகளை, ஒரு தாய் தனது குழந்தையை காப்பதுபோல், பாதுகாத்து வருகின்றது மாண்புமிகு அம்மாவுடைய அரசு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!**

தமிழ்நாட்டில் வறட்சியினை எதிர்கொள்ளவும், நீர்வள ஆதாரங்களை பயனீட்டாளர்களின் பங்களிப்புடன் புனரமைக்க பண்டைய **குடிமராமத்து திட்டத்திற்கு** புத்துயிர் அளிக்கும் வகையில் ‘**குடிமராமத்து திட்டம்**’ என்ற ஒரு சிறப்பான திட்டம் என்னால் **13.3.2017** அன்று துவக்கப்பட்டு, இன்றுவரை **1,418** கோடி ரூபாய் செலவில் ஏரிகள், வரத்து வாய்க்கால்கள் போன்ற நீர் நிலைகளில் **6,211** குடிமராமத்து பணிகள் மேற்கொள்ளப்பட்டன. அதே போன்று கிராம உள்ளாட்சி அமைப்புகளின் பராமரிப்பில் இருக்கின்ற **28,623** நீர்நிலைகள் **422.60** கோடி ரூபாய் செலவில் சீரமைக்கப்பட்டன. தூர்வாரும்போது, ஏரிகள் ஆழமாவதுடன், கிடைக்கும் வண்டல் மண் விவசாயிகளின் நிலத்திற்கு இயற்கை உரமாகவும் பயன்படுவதற்கு திட்டம், தீட்டி, நடைமுறைப்படுத்தி, வெற்றி கண்ட அரசு அம்மாவுடைய அரசு.

மேலும், பாசன வசதி பெறும் நிலங்களின் பரப்பு அதிகரிக்கப்பட்டு சென்ற ஆண்டு வறட்சிக் காலத்திலும் உணவு உற்பத்தி அதிகரித்துள்ளது. இந்த ஆண்டு

பருவமழை காலத்தில் பெய்த மழைநீர் அதிக அளவு சேமிக்கப்பட்டு, நீர்நிலைகள் அனைத்தும் முழு கொள்ளவை எட்டியுள்ளது. இதன் மூலம் இந்த ஆண்டு உணவு உற்பத்தியில் தமிழ்நாடு அகில இந்திய அளவில் சாதனை படைக்க உள்ளது.

மழைநீர் வீணாக கடலில் கலப்பதை தடுத்து, விவசாயிகளுக்கும், பொதுமக்களுக்கும் தேவையான நீர் கிடைக்கவும், நிலத்தடி நீர் மட்டம் உயரவும், மூன்றாண்டு கால திட்டமாக 1,000 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து, கடந்த இரண்டு ஆண்டுகளில் 934 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நதிகள், ஓடைகள் ஆகியவற்றின் குறுக்கே தடுப்பணைகள் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதுபோன்று, ஊரக வளர்ச்சித் துறையின் மூலமாக 730.40 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 31,834 சிறிய தடுப்பணைகள் கட்டப்பட்டுள்ளன.

காவேரி ஆற்றுப் பாசன பகுதிகளில், கடைமடை வரை தண்ணீர் செல்ல கடந்த காலங்களில் பல நாட்களாகும். ஆனால், தமிழ்நாடு முழுவதும் குடிமராமத்து திட்டமும், காவேரி டெல்டா மாவட்டங்களில் தூர்வாரும் பணிகளும் செம்மையாக மேற்கொள்ளப்பட்டதால், இந்த ஆண்டு குறுகிய காலத்திலே கடைமடை வரை தண்ணீர் தங்குதடையின்றி சென்றடைந்துள்ளது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சியுடன் பயிர் சாகுபடியில் ஈடுபட்டனர்.

தமிழ்நாட்டு மக்களின் கனவு திட்டங்களான **காவேரி-குண்டாறு இணைப்புத் திட்டம், தாமிரபரணி-கருமேனி ஆறு - நம்பியாறு நதிகள் இணைப்புத் திட்டம், அத்திக்கடவு அவினாசி திட்டம், மேட்டூர்-சரபங்கா வடிநில நீரேற்றுத் திட்டம், கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே ஆதனூர்-குமாரமங்கலத்தில் கதவணை, நஞ்சைப்புகளூரில் காவேரியில் புதிய கதவணைத் திட்டம், தமிழ்நாடு பாசன வேளாண்மை நவீனப்படுத்தும் திட்டம்** என பல்வேறு நீர்வள ஆதார திட்டங்களை நிறைவேற்றி வரும் ஒரே அரசு, மாண்புமிகு அம்மாவின் அரசு. தமிழ்நாடு முழுவதும் மழைநீர் சேகரிப்பு மற்றும் நீர் மேலாண்மைத் திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தியன் மூலம் இன்று தமிழ்நாட்டில் நிலத்தடி நீர் மட்டம் உயர்ந்துள்ளது.

கங்கையை தூய்மைப்படுத்துதல் திட்டத்தைப் போன்று, தமிழ்நாட்டிலுள்ள காவேரி மற்றும் அதன் கிளை ஆறுகள் மாசுபடுத்துவதிலிருந்து முழுமையாக

மீட்டெடுக்க **"நடந்தாய் வாழி காவேரி"** திட்டத்தில் புனரமைக்கும் பணிக்கான முதல்நிலை திட்ட அறிக்கை 10,711 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டு, கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கக் கோரி, மத்திய அரசின் ஜல்சக்தி துறைக்கு அனுப்பப்பட்டுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!**

**உணவு உற்பத்தியை பெருக்கவும், அதே நேரத்தில் விவசாயிகளின் நலன் காக்கவும், ஒரு விவசாயி தலைமை ஏற்று ஆட்சி நடத்தும், மாண்புமிகு அம்மாவின் அரசு, பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.**

கடந்த 30 ஆண்டுகளில் இல்லாத வகையில் காவேரி டெல்டா பகுதியில் அதிகபட்ச குறுவை நெல் சாகுபடி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கடந்த ஒன்பது ஆண்டுகளில் ஏழாவது முறையாக மாநிலத்தின் உணவு தானிய உற்பத்தி 100 லட்சம் மெட்ரிக் டன்னிற்கு அதிகமாக எட்டி சாதனை படைத்துள்ளது மாண்புமிகு அம்மாவுடைய அரசு.

அரசு நேரடிக் கொள்முதல் நிலையங்களில் 32.41 லட்சம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்து சாதனை படைத்த அரசும் மாண்புமிகு அம்மாவுடைய அரசு தான்.

மாண்புமிகு அம்மாவின் அரசு, கடந்த 7 ஆண்டுகளில், 5 முறை கிருஷி கர்மான் விருதினை பெற்று சாதனை படைத்த அரசு மாண்புமிகு அம்மாவுடைய அரசு.

விவசாயிகள் தலைவர் மரியாதைக்குரிய மறைந்த திரு.சி. நாராயணசாமி நாயுடு அவர்கள் ஆற்றிய சிறந்த சேவையை போற்றிப் பாராட்டும் வகையில், திருந்திய நெல் சாகுபடி தொழில் நுட்பத்தை கடைப்பிடித்து, அதிக நெல் மகசூல் பெற்றமைக்காக, குடியரசு தின விழாவில் வழங்கப்படும் விருது, **இந்த ஆண்டு முதல் திரு.சி.நாராயணசாமி நாயுடு நெல் உற்பத்தித் திறனுக்கான விருது**' என்ற பெயரில் வழங்கப்பட்டு வருகின்றது. பாரம்பரிய நெல் பாதுகாவலர் **'திரு.நெல் ஜெயராமன்'**

அவர்களது பெயரில் **'பாரம்பரிய நெல் பாதுகாப்பு மையம்'** உருவாக்க நடவடிக்கை எடுத்து, உழவுக்கும், உழவர்களுக்கும் பாடுபட்டவர்களை, தமிழ்நாடு அரசு பெருமை அடைய செய்துள்ளது என்பதையும் இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புகின்றேன்.

கடந்த நான்கு ஆண்டுகளில், பயிர் காப்பீட்டுத் திட்டத்தினை தமிழ்நாடு அரசு சிறப்பாக செயல்படுத்தி வருகிறது. இதுவரை, சுமார் 53 லட்சத்து 49 ஆயிரம் **விவசாயிகளுக்கு இழப்பீட்டுத் தொகையாக 9,312 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.** அதேபோன்று, நடப்பாண்டிலும் இத்திட்டத்தினை செயல்படுத்திடும் வகையில், நமது விவசாயிகளின் நலன் கருதி, இணை காப்பீட்டுத் திட்டம் என்ற புதிய அணுகுமுறையில் 1,470 கோடி ரூபாய் காப்பீட்டு கட்டணம் மானியமாக ஒப்பளித்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. இதுவரை, 23 லட்சத்து 57 ஆயிரம் விவசாயிகள் சாகுபடி செய்த 39.56 லட்சம் ஏக்கர் பரப்பில் உள்ள பயிர்களை காப்பீடு செய்துள்ளனர்.

நுண்ணீர் பாசன திட்டத்தின்கீழ் கடந்த 10 ஆண்டுகளில் 3,972 கோடி ரூபாய் மானியங்கள் மூலம் 7.66 லட்சம் ஹெக்டேர் நிலங்கள் பாசன வசதி பெற்று 7.17 லட்சம் விவசாயிகள் பயன் பெற்றுள்ளனர். 2019-20 ஆண்டில் **நுண்ணீர் பாசன திட்டத்தை செயல்படுத்துவதில் இந்தியாவிலேயே தமிழ்நாடு முதலிடம் பெற்றுள்ளது என்ற செய்தியை இந்த நேரத்தில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!**

**"வாய் மட்டும் இருந்தால் மொழி பேசும் தெய்வம்"**

என்று கால்நடையை போற்றி புரட்சித் தலைவர் அவர்கள் பாடிய பாடல் வரிகளுக்கு ஏற்ப கால்நடைத் துறையில் உயர் வளர்ச்சியினை அடைய **ஆசியாவிலேயே மிகப்பெரிய ஒருங்கிணைந்த கால்நடை ஆராய்ச்சி பூங்கா 1,102 ஏக்கர் பரப்பளவில் 1,023 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தலைவாசலில் அமைக்கப்பட்டு வருகிறது.**

தஞ்சாவூர், திருநெல்வேலி, சேலம், உடுமலைப்பேட்டை மற்றும் தேனி ஆகிய இடங்களில் 275 கோடி ரூபாய் செலவில் 5 கால்நடை மருத்துவ கல்லூரிகள் தொடங்கப்பட்டு, செயல்பட்டு வருகின்றன.

5.10 கோடி ரூபாய் செலவில் 6 கால்நடை மருத்துவ பல்கலைக் கழக ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனங்கள் தொடங்கப்பட்டுள்ளன.

83.40 கோடி ரூபாய் செலவில் 1,105 கால்நடை மருந்தகங்கள், 14 கோடி ரூபாய் செலவில் 440 துணை நிலையங்கள், 6.55 கோடி ரூபாய் செலவில் 15 கால்நடை மருத்துவமனைகள் மற்றும் 8.40 கோடி ரூபாய் செலவில் 8 பன்முக கால்நடை மருத்துவமனைகள் தொடங்கப்பட்டுள்ளன.

2010-11ல் நாள் ஒன்றிற்கு 20.26 லட்சம் லிட்டராக இருந்த ஆவின் கொள்முதல், தற்போது 37.46 லட்சம் லிட்டராக உயர்ந்து மிகப்பெரிய சாதனையை படைத்துள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!**

கடந்த ஆண்டு இறுதியில் 'நிவர்' மற்றும் 'புரெவி' என அடுத்தடுத்து இரண்டு புயல்களால் தமிழ்நாடு பாதிப்புக்கு உள்ளானது. பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு அமைச்சர்கள் குழுவும், அதிகாரிகள் குழுவும் அனுப்பி வைக்கப்பட்டு நிவாரணப் பணிகள் முடுக்கி விடப்பட்டன. **புயலின் போதே, நான் செம்பரம்பாக்கம் ஏரியை பார்வையிட்டு, அதன் பாதுகாப்பு பற்றி ஆய்வு செய்து, அதிகாரிகளுக்கு உரிய உத்தரவுகளை வழங்கினேன். மறுநாளே, கடலூர் உள்ளிட்ட புயல் பாதித்த மாவட்டங்களுக்கு நான் நேரில் சென்று, விவசாயிகளுக்கும், பொதுமக்களுக்கும் ஆறுதல் கூறி, மீட்பு நடவடிக்கைகளை துரிதப்படுத்தினேன்.**

இதன் காரணமாக, உயிரிழப்புகள் இல்லாமல் தடுக்கப்பட்டது. பாதிக்கப்பட்ட மக்கள் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டனர். அவர்களுக்கு, சூடான, தரமான உணவு வழங்கப்பட்டது. அங்கு மருத்துவ முகாம்கள் அமைக்கப்பட்டு, கோவிட் தொற்று ஏற்படாமல் தடுக்கப்பட்டது. புயலால் பாதிக்கப்பட்ட மின் இணைப்புகள் போர்க்கால அடிப்படையில் சீர் செய்யப்பட்டு, வெகு விரைவிலேயே மின் விநியோகம் சரி செய்யப்பட்டது. இவ்வாறு எடுக்கப்பட்ட சீரிய நடவடிக்கைகளினால், தமிழ்நாடு வெகு விரைவிலேயே இயல்பு நிலைக்கு திரும்பியது.

தமிழக விவசாயிகளின் துயர் துடைக்கும் பொருட்டு, **‘நிவர்’** மற்றும் **‘புரெவி’** புயலின் தாக்கத்தின் காரணமாக பாதிப்பிற்குள்ளான வேளாண் மற்றும் தோட்டக்கலைப் பயிர்களுக்கு **உயர்த்தப்பட்ட இடு பொருள் மானியம்** வழங்க **565 கோடியே 46 இலட்சம் ரூபாய்** தமிழக அரசால் ஒதுக்கீடு செய்து வழங்கப்பட்டுள்ளது.

மாநில பேரிடர் நிவாரண நிதி விதிமுறைகளின்படி, பேரிடர்களால் பாதிப்பிற்குள்ளான **மானாவாரி பயிர்களுக்கு ஹெக்டேர் ஒன்றுக்கு 7,410 ரூபாயும், நீர் பாசன வசதி பெற்ற பயிர்களுக்கு ஹெக்டேர் ஒன்றுக்கு 13,500 ரூபாயும், நீண்டகால பயிர்களுக்கு ஹெக்டேர் ஒன்றுக்கு 18,000 ரூபாயும்** இடுபொருள் மானியமாக வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. ஆனால்,

- **மானாவாரி பயிர்களுக்கு ஹெக்டேர் ஒன்றுக்கு 10,000 ரூபாயும்,**
- **நெற்பயிர் மற்றும் நீர் பாசன வசதி பெற்ற பயிர்களுக்கு ஹெக்டேர் ஒன்றுக்கு 20,000 ரூபாயும்,**
- **நீண்டகால பயிர்களுக்கு ஹெக்டேர் ஒன்றுக்கு 25,000** உயர்த்தி வழங்கவும்,

அதே போன்று, அதிகபட்சமாக 2 ஹெக்டேர் பரப்பளவில் மட்டும் பாதிப்பிற்குள்ளான பயிர்களுக்கு நிவாரணம் வழங்கப்பட வேண்டும் என்ற உச்சவரம்பை தளர்த்தி, பாதிக்கப்பட்ட பரப்பளவு முழுவதற்கும் உச்சவரம்பின்றி இடுபொருள் நிவாரணம் வழங்கவும் நான் ஆணையிட்டு, அதை வழங்கிய அரசு அம்மாவின் அரசு என்பதை இந்த நேரத்திலே தெரிவிக்க விரும்புகின்றேன்.

தமிழ்நாட்டில், வடகிழக்கு பருவமழை ஜனவரி மாதத்தில் தொடர்ச்சியாக பெய்த மிக கன மழையின் காரணமாக, அறுவடை நிலையில் இருந்த நெற்பயிர்களும், இதர பயிர்களும் அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளதால், விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ள இழப்பை கருத்தில் கொண்டு, போர்க்கால அடிப்படையில், பாதிக்கப்பட்ட வயல்களின் கணக்கெடுப்புப் பணியினை மேற்கொள்வதற்கு வேளாண் மற்றும் வருவாய்த்துறை அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டதன் அடிப்படையில், ஜனவரி 2021 மாதத்தில் தொடர்ச்சியாக பெய்த கன மழையின் காரணமாக, **6,62,689** ஹெக்டேர் வேளாண் பயிர்களும், **18,645**

ஹெக்டேர் தோட்டக்கலைப் பயிர்களும் பாதிப்பிற்கு உள்ளாகியுள்ளதாக கணக்கிடப்பட்டு, நிவாரணம் வழங்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு அரசின் இந்த நடவடிக்கைகள் பல்வேறு தரப்பினரால் பாராட்டப்பட்டது என்பதை இங்கே பெருமிதத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்கு காரணமான மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், அரசு அதிகாரிகள், பணியாளர்கள் ஆகியோருக்கு எனது மனமார்ந்த, நன்றியையும், பாராட்டுதல்களையும் இந்த அவையின் வாயிலாக தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!**

**சீனாவில் கொரோனா வைரஸ் நோய் தொற்று ஏற்பட்டது பற்றி அறிந்தவுடன், ஜனவரி 2020 முதல் முனைப்புடன் செயல்பட்டு துரிதமான நடவடிக்கைகளை நான் முடுக்கிவிட்டேன்.** தமிழ்நாட்டில் 7.3.2020 அன்று நோய் தொற்று முதன் முதலில் கண்டறியப்பட்டவுடன் களத்தில் துரிதமாக பல்முனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

**“விலகி இருங்கள், விழித்திருங்கள், வீட்டிலேயே இருங்கள்”** எனும் எனது கனிவான வேண்டுகோளை ஏற்று தமிழ்நாட்டு மக்கள் உரிய ஒத்துழைப்பை வழங்கினார்கள்.

**நமது கூட்டு முயற்சியினால், நோய் தொற்றிலிருந்து குணமடைந்து, இல்லம் திரும்புவோரின் சதவிகிதம் இன்று இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் அதிகம். அதுமட்டுமல்ல உயிர் இழந்தோரின் சதவிகிதமும் இந்தியாவில் மட்டுமல்ல, உலகத்திலேயே தமிழ்நாட்டில்தான் மிக மிகக் குறைவு. இதற்காக மாண்புமிகு பாரதப் பிரதமர், மருத்துவ வல்லுநர்கள், பொது சுகாதார வல்லுநர்கள், பத்திரிகையாளர்கள், நடுநிலையாளர்கள், தமிழ்நாடு அரசை தொடர்ந்து பாராட்டி வருகிறார்கள்.**

**தமிழ்நாட்டில் சுமார் 1 கோடியே 54 லட்சம் பேருக்கு கொரோனா பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.** தமிழ்நாடு முழுவதும் 68 அரசு மற்றும் 186 தனியார் ஆய்வகங்கள் உட்பட 254 ஆய்வகங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. **இந்தியாவிலேயே அதிகமான RTPCR பரிசோதனைகள் மேற்கொள்கிற ஒரே**

**மாநிலம் தமிழ்நாடுதான். இதில் 78 விழுக்காடு அரசு பரிசோதனை மையங்களில் செய்யப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில் இறப்பு விகிதமும் 1.47 விழுக்காடாக குறைந்துள்ளது.**

மருத்துவமனைகளுக்கு இந்த தொற்று நோயை குணப்படுத்த தேவையான அனைத்து மருத்துவ உபகரணங்களும், உரிய மருந்துகளும் தங்கு தடையின்றி வழங்கப்பட்டன. களப்பணியில் உள்ள அனைத்து பணியாளர்களுக்கும், கட்டுப்பாட்டு பகுதியில் வாழும் மக்களுக்கும், ஜிங்க் மற்றும் வைட்டமின் மாத்திரைகள் இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றன. ஒருங்கிணைந்த நோய் மேலாண்மைக்காக அலோபதி மருத்துவத்துடன், இந்திய முறை மருத்துவ சிகிச்சை, நோய் எதிர்ப்பு சக்தியினை அதிகரிப்பதற்காக சித்த மருந்தான கபசுர குடிநீர், பெரும்பான்மையான மக்களுக்கு தொடர்ந்து விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

14 முறை அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுடனும், 14 முறை மருத்துவ வல்லுநர்களுடன், ஆலோசனைக் கூட்டங்களை நான் நடத்தியுள்ளேன். தலைமைச் செயலர் அவர்கள் தலைமையில் 14 முறை மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் ஆலோசனைக் கூட்டங்கள் நடைபெற்றுள்ளன. இவ்வாறு ஒவ்வொரு மாதமும் ஆலோசனைக் கூட்டங்களை நடத்தி, **அனைத்து மாவட்டங்களும் அரசின் ஆலோசனைகளை ஏற்று சிறப்பாக செயல்பட்ட காரணத்தால், இந்நோய்த் தொற்றுப் பரவல், இந்தியாவின் மற்ற மாநிலங்களைக்காட்டிலும் தமிழகத்தில் குறைந்து, தற்போது தொற்று பாதித்தவர்கள் 500க்கும் குறைவாக உள்ள நிலையை காண முடிகிறது.** இது தவிர, தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களுக்கும் நான் சுற்றுப்பயணம் செய்து, என்னுடைய தலைமையில் மாவட்ட ஆட்சித்தலைவர்களுடன் ஆலோசனைக் கூட்டங்களை நடத்தி, மேலும், கூடுதல் கவனம் செலுத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ள அறிவுறுத்தினேன்.

சிறந்த மருத்துவ உட்கட்டமைப்பாலும், மருத்துவர்கள், செவிலியர்கள், தூய்மைப் பணியாளர்கள், பிற அரசு ஊழியர்கள் உள்ளிட்ட தன்னலம் கருதா பணியினாலும் இந்த நோயை கட்டுப்படுத்துவதில் தமிழ்நாடு வெற்றிக் கொள்ள முடிந்தது.

டாக்டர் ரங்கராஜன் கமிட்டி அளித்த ஆலோசனைகளின் அடிப்படையில், கொரோனா காலக்கட்டத்தில் தமிழர் திருநாளாம் தைப்பொங்கலை அனைத்து இல்லங்களிலும் சிறப்பாக கொண்டாட, சுமார் **2.06** கோடி அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசாக **2,500/-** ரூபாய் ரொக்கம் மற்றும் முழுக்கரும்புடன் கூடிய பொங்கல் தொகுப்பு வழங்கப்பட்டது. இன்றைக்கு அனைத்து குடும்பங்களிலும் தைப் பொங்கல் சிறப்பாக இந்த ஆண்டு கொண்டாடப்பட்டது என்ற செய்தியை இந்த நேரத்திலே தெரிவிக்க விரும்புகிறேன்.

தற்போது ஆரம்ப சுகாதார நிலையங்கள் இல்லாத, ஏழை, எளிய மக்கள் அதிகம் வசிக்கும் இடங்களைக் கண்டறிந்து, சாதாரண காய்ச்சல் போன்ற நோய்களுக்கு உடனடியாக அந்தப் பகுதியிலேயே சிகிச்சை பெறக்கூடிய அளவிற்கு, தமிழ்நாடு முழுவதும், ஒரு மருத்துவர், ஒரு செவிலியர் மற்றும் ஒரு உதவியாளருடன் **2,000 "முதலமைச்சரின் அம்மா மினி கிளினிக்குகள்" துவங்கப்பட்டு வருகின்றன.** அம்மா மினி கிளினிக்குகள் மூலமாக ஏழை, எளிய மக்கள் அதிகமாக வசிக்கின்ற பகுதிகளைத் தேர்ந்தெடுத்து, அங்கேயே அவர்கள் தங்கள் உடலில் ஏற்படுகின்ற நோய்களுக்கு சிகிச்சை பெறக்கூடிய சூழ்நிலையை நாங்கள் உருவாக்கித் தந்திருக்கின்றோம். **இதனை ஒரு வரலாற்றுச் சாதனையாக எங்களுடைய அரசு கருதுகிறது.**

**கொரோனா** நோய் பரவலை கட்டுப்படுத்துவதற்காக தடுப்பூசி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என்ற அறிவிப்பு வந்தவுடன், அந்த **தடுப்பு ஊசி தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மக்களுக்கு கட்டணமில்லாமல் போடப்படும் என்று அறிவிப்பை தந்த முதல் மாநிலம் தமிழ்நாடுதான்.** இந்த திட்டத்தினை முனைப்புடன் செயல்படுத்த மாநில மற்றும் மாவட்ட அளவில் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. மத்திய அரசின் வழிகாட்டுதலின்படி, முன்னுரிமை அடிப்படையில் **20** விழுக்காடு மக்களுக்கு அதாவது **1.6** கோடி மக்களுக்கு, நடப்பு ஆண்டுக்குள் தடுப்பூசி போட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இந்த திட்டத்தினை வெற்றிகரமாக செயல்படுத்தி, தமிழ்நாட்டை கொரோனா தொற்று நோய் அற்ற மாநிலமாக உருவாக்குவோம் என்பதை உறுதியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**தமிழ்நாடு அரசு, கோவிட் நோய் தொற்று கட்டுப்பாடு மற்றும் நிவாரணப் பணிகளுக்காக இதுவரை, 7,604.80 கோடி ரூபாய் செலவிட்டுள்ளது என்பதையும் இந்த மாமன்றத்திற்கு தெரிவித்துக் கொள்கிறேன்.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!**

நீட் தேர்வினால், தங்களது மருத்துவ கனவை நிறைவேற்ற முடியுமா என்றிருந்த **அரசு பள்ளி மாணாக்கர்களின்** கனவை நனவாக்க, அவர்களுக்கு மருத்துவ படிப்பில் **7.5 விழுக்காடு உள்ஒதுக்கீடு வழங்கும், சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த ஆணையை மாண்புமிகு அம்மாவின் அரசு பிறப்பித்துள்ளது.** அதன் அடிப்படையில், இந்த ஆண்டு **336** அரசு பள்ளி மாணாக்கர்களுக்கு மருத்துவக் கல்லூரியிலும், **99** மாணாக்கர்களுக்கு பல் மருத்துவ கல்லூரியிலும் சேர்ந்துள்ளனர். தமிழ்நாடு மருத்துவ சேவை கழகத்தில் **16** கோடி ரூபாயில் சுழல் நிதி உருவாக்க ஆணையிடப்பட்டுள்ளது. அந்நிதியில் இருந்து மாணாக்கர்களுக்கான கல்வி, விடுதி கட்டணங்கள் போன்றவற்றை மாண்புமிகு அம்மாவின் அரசே நேரடியாக கல்லூரி நிர்வாகத்திற்கு செலுத்துகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,**

தமிழ்நாட்டில் மொத்த மேல்நிலைப் பள்ளிகளின் எண்ணிக்கை – **7,809.** அதில் **12**ஆம் வகுப்பு படிக்கும் மாணவர்களின் எண்ணிக்கை – **8,41,251.** இதில் அரசு மேல்நிலைப் பள்ளிகளின் எண்ணிக்கை – **3,056. 12**ஆம் வகுப்பு படிக்கும் அரசு பள்ளி மாணவர்களின் எண்ணிக்கை – **3,44,485.** இதில் அரசுப் பள்ளிகளில் படிக்கும் மாணவர்களின் சதவிகிதம் **– 41. 41** சதவிகிதம் அரசுப் பள்ளியில் படிக்கின்ற மாணவர்களில் கடந்த ஆண்டு நீட் தேர்விலே **6** மாணவர்கள் தான் மருத்துவக் கல்லூரியிலே சேர்ந்து படிக்கக்கூடிய வாய்ப்பு கிடைத்தது. தற்பொழுது மருத்துவ கல்லூரியின் இடம் **3,650.** இதில் **7.5** சதவிகித இடங்கள் அரசு பள்ளி மாணவர்களுக்கு இடம் கிடைத்துள்ளது. **41** சதவிகிதம் அரசுப் பள்ளியில் படிக்கின்ற மாணவர்களுக்கு **7.5** சதவிகிதம் உள் ஒதுக்கீட்டின் மூலம் நடப்பாண்டில்

435 பேர் மருத்துவக் கல்லூரியில் சேர்ந்து படிக்க வாய்ப்பை இன்றைக்கு நாங்கள் உருவாக்கி இருக்கின்றோம்.

அரசு பள்ளியில் ஏழை, எளிய மாணவர்கள் தான் அதிகமாக படிக்கிறார்கள். அவர்களின் மருத்துவர் ஆகும் கனவை நனவாக்கிய அரசு மாண்புமிகு அம்மாவின் அரசு. 2011ல் திமுக ஆட்சி முடிவடையும்போது மருத்துவ கல்வி பயில்வதற்கு 1,945 இடங்கள் தான் தமிழகத்திலே இருந்தன. இதனை மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சி செய்த 2011 முதல் அவர்கள் மறைந்த வரை ஆட்சி செய்த காலத்திலே 3,060 ஆக உயர்த்தினார்கள். அதாவது, 1,115 இடங்களை புதியதாக மருத்துவக் கல்வி பயில அம்மா அவர்கள் அதிகரித்தி கொடுத்தார்கள். நான் முதல்வராக பொறுப்பேற்றதில் இருந்து 3,060 ஆக இருந்த மருத்துவம் பயிலும் இடத்தை 3,650 ஆக உயர்த்தியுள்ளேன். இப்பொழுது ஒரே ஆண்டில் வரலாற்றுச் சாதனையாக 11 புதிய மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் புதிதாக உருவாக்கப்பட்டுள்ளன. இதன்மூலம் 1,650 மருத்துவம் பயிலும் இடங்கள் தோற்றுவிக்கப்பட உள்ளன.

நான் முதலமைச்சராக பொறுப்பேற்றதில் இருந்து முதல் கட்டமாக 590 பேர் மருத்துவர்களாக சேர்ந்து படிக்கக்கூடிய வாய்ப்பு, இப்போது 11 புதிய மருத்துவக் கல்லூரிகள் தோற்றுவித்ததன் மூலமாக அதிலிருந்து 1,650 பேர் புதிதாக மருத்துவம் சேர்ந்து படிக்கக்கூடிய வாய்ப்பு, இரண்டும் சேர்த்தால் இந்த நான்கு ஆண்டு காலத்திலே 2,240 பேர் புதிதாக மருத்துவக் கல்வி படிக்கக்கூடிய வாய்ப்பை உருவாக்கி தந்த அரசு எங்களுடைய அரசு.

இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2011ஆம் ஆண்டில் ஆட்சி பொறுப்பை ஏற்றதிலிருந்து அம்மா அவர்கள் மறைகின்ற வரை 1,115 பேர் புதிதாக மருத்துவக் கல்வி படிக்கின்ற வாய்ப்பை உருவாக்கி தந்தார்கள். மாண்புமிகு அம்மாவின் மறைவிற்கு பிறகு, மாண்புமிகு அம்மாவின் அரசு எடுத்த நடவடிக்கையின் காரணமாக 2,240 பேர் புதிதாக மருத்துவக் கல்வி படிக்கின்ற வாய்ப்பை உருவாக்கி தந்தது. 2011–லிருந்து 2021 வரை மாண்புமிகு அம்மாவுடைய அரசு 3,355 பேர் மருத்துவக் கல்வி படிக்கக் கூடிய வாய்ப்பை உருவாக்கி தந்த அரசு

எங்களுடைய அரசு. தமிழகத்தில் வரும் கல்வியாண்டில் மருத்துவப் படிப்பில் மொத்தம் 5,300 இடங்கள் இன்றைக்கு இருக்கின்றன.

தமிழ்நாட்டில் கடந்த 10 ஆண்டுகளில் மட்டும், 17 புதிய அரசு மருத்துவக் கல்லூரிகள் தொடங்கப்பட்டு, வரலாற்று சாதனை படைத்த அரசு அம்மாவுடைய அரசு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!**

**''மீன்வள ஆதாரங்களை வளங்குன்றா வண்ணம் பேணுதல், பயன்படுத்துதல், மேலாண்மை செய்தல் மற்றும் பாதுகாப்பான மீன்பிடிப்பிற்கு வழிவகுத்தல் மூலம் தமிழ்நாட்டு மீனவர்களின் வளமை மற்றும் பாதுகாப்பினை உறுதி செய்தல்''**
என்ற தொலைநோக்குப் பார்வை திட்டத்துடன், மீனவர்களின் வாழ்வில் ஒளி வீச, புரட்சித் தலைவர் காட்டிய பாதையில், மாண்புமிகு அம்மா அவர்களும், மாண்புமிகு அம்மாவின் அரசும் மீனவர்கள் நலன் காக்க, மீன்பிடி தடை கால நிவாரணம் மற்றும் மீன்பிடி குறைவுகால நிவாரணம் வழங்குதல் போன்ற பல்வேறு நலத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

ஆழ்கடலில் மீன்பிடிக்கும் மீனவர்களுக்கு வானிலை எச்சரிக்கை தகவல்களை வழங்க, நவீன தொலைத்தொடர்பு கருவிகளான Satellite Phone, NAVIC மற்றும் NAVTEX போன்றவற்றை வழங்கி வருகிறது.

கடந்த 10 ஆண்டுகளில், தமிழ்நாட்டில் 4 மீன்பிடி துறைமுகங்கள் 501 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ளன. மேலும், 8 மீன்பிடி துறைமுகங்கள் 939 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வருகின்றன.

29 இடங்களில் 282 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மீன் இறங்கு தளங்கள் கட்டப்பட்டுள்ளன. மேலும் 14 இடங்களில் புதியதாக மீன் இறங்கு தளங்கள் 232 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வருகின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!**

2011 ஆம் ஆண்டு மே மாதம் மாண்புமிகு அம்மா அவர்கள் மீண்டும் முதலமைச்சராக பொறுப்பேற்ற போது, மிகவும் சவாலாக இருந்த பிரச்சனை மின்வெட்டுப் பிரச்சனை. முந்தைய மைனாரிட்டி திமுக அரசு தமிழ்நாட்டை இருளில் மூழ்கடித்து, தமிழ்நாட்டை இருண்ட காலத்திற்கு கொண்டு சென்றது. அறிவிக்கப்பட்ட, அறிவிக்கப்படாத பல மணி நேர மின்வெட்டு மற்றும் மின் தடையை தமிழ்நாட்டு மக்கள் தினம் தினம் எதிர்கொள்ள வேண்டிய சூழ்நிலையில் இருந்தனர். அதற்கு முக்கியக் காரணம் முந்தைய திமுக அரசு புதிய மின் உற்பத்தித் திறனை ஏற்படுத்த தவறியது தான். அதில் சரியான கவனம் செலுத்தாது தான்.

2011ஆம் ஆண்டு மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சி பொறுப்பேற்றபின், மாண்புமிகு அம்மா அவர்கள் புதுப்புது திட்டங்கள் தீட்டி, அவற்றை போர்க்கால அடிப்படையில் நடைமுறைப்படுத்தியதன் மூலமாகவும் அவரை தொடர்ந்து மாண்புமிகு அம்மாவின் அரசு செயல்படுத்திய தொலைநோக்கு திட்டங்களின் பயனாகவும், 2011ஆம் ஆண்டு 16,883 மெகாவாட்டாக இருந்த மின் நிறுவு திறன் 10 ஆண்டுகளில், 32,149 மெகாவாட்டாக, அதாவது இரு மடங்காக அதிகரித்துள்ளது.

துணை மின்நிலையங்களின் எண்ணிக்கை 1,343 லிருந்து 1,823 ஆகவும், மிக உயர் மின்னழுத்த பாதை 24,018 சுற்று கிலோமீட்டரிலிருந்து 35,622 சுற்று கிலோமீட்டராகவும், அனைத்துவகை மின் நுகர்வோர்களின் எண்ணிக்கை 2.23 கோடியிலிருந்து 3.14 கோடியாகவும், விவசாய மின் இணைப்புகள் 19.73 லட்சத்திலிருந்து 21.57 லட்சமாகவும் உயர்ந்து சாதனை படைத்த அரசு மாண்புமிகு அம்மாவுடைய அரசு.

புதிய மின் நிலையங்களை நிறுவியதன் மூலமாகவும், புதுப்பிக்கத்தக்க எரிசக்தியின் மூலமாகவும், கிடைக்கும் கூடுதல் மின்சாரம், மின் கட்டமைப்பில் இணைக்கப்பட்டுள்ளது. மேலும், மாண்புமிகு அம்மாவும், அவரைத் தொடர்ந்து மாண்புமிகு அம்மாவின் அரசும், கடந்த 10 ஆண்டுகளாக எடுத்துவரும் பல்வேறு சீரிய நடவடிக்கைகளால் மின் தட்டுப்பாடு என்ற பேச்சுக்கே இடம் இல்லாத வகையில், தமிழ்நாட்டில் தரமான மின்சாரம் தங்குதடையின்றி விநியோகிக்கப்பட்டு

வருகிறது. **தமிழ்நாடு தொடர்ந்து மின்மிகை மாநிலமாகவும் திகழ்ந்து வருகின்றது என்பதை பெருமையோடு இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!**

**"நல்ல நல்ல பிள்ளைகளை நம்பி**
**இந்த நாடே இருக்குது தம்பி**
**சின்னஞ்சிறு கைகளை நம்பி**
**ஒரு சரித்திரம் இருக்கிறது தம்பி"**

என்ற மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் பாடல் வரிகளுக்கு ஏற்ப வருங்காலத்தில் சிறந்த மனிதவளத்தினை உருவாக்க மாண்புமிகு அம்மாவின் அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

புதியதாக 248 தொடக்க பள்ளிகள் தொடங்கப்பட்டுள்ளன. 117 தொடக்கப்பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாகவும், 1,079 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும்; 604 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரம் உயர்த்தப்பட்டுள்ளன. இதன் மூலம் மாணாக்கர்கள் வசிக்கும் பகுதிகளுக்கு அருகிலேயே பள்ளிகள் அமைய வழிவகை செய்யப்பட்டுள்ளது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். இதன் மூலமாக கல்வி கற்போருடைய எண்ணிக்கை உயர்ந்து, இந்தியாவிலேயே கற்போருடைய எண்ணிக்கை உயர்ந்த மாநிலம் தமிழ்நாடு என்ற பெருமையை இன்றைக்கு அடைந்திருக்கின்றோம்.

பள்ளி இடைநிற்றலை தடுக்க கடந்த 10 ஆண்டுகளில் 22,285 கோடி செலவில் மாணாக்கர்களுக்கு விலையில்லா நோட்டு புத்தகங்கள், பாடப்புத்தகங்கள் என 14 வகையான பொருட்கள் விலையில்லாமல் வழங்கப்பட்டு வருகின்றன. அதுமட்டுமன்றி, தகவல் தொழில் நுட்பவியலில் மாணாக்கர்கள் சிறந்து விளங்க விலையில்லா மடிக்கணினி வழங்கப்பட்டு வருகிறது. கடந்த 10 ஆண்டுகளில், 52.31 லட்சம் மாணாக்கர்களுக்கு 7,337.50 கோடி ரூபாய் செலவில் மடிக்கணினிகள் வழங்கப்பட்டுள்ளது.

அரசு பள்ளி மாணாக்கர்கள், எளிதில் பள்ளிக்குச் சென்று வர, விலையில்லா மிதிவண்டி வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த திட்டத்தின் கீழ் 10 ஆண்டுகளில் 59.77 லட்சம் மிதிவண்டிகள் 2,119.38 கோடி செலவில் வழங்கப்பட்டுள்ளன.

மாணாக்கர்கள் கல்லூரி படிப்பினை தொடர்வதற்கு வசதியாக 7 சட்டக் கல்லூரிகள், 21 பல்வகை தொழில் நுட்ப கல்லூரிகள், 4 பொறியியல் கல்லூரிகள், 5 கால்நடை மருத்துவக் கல்லூரிகள், 40 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் துவக்கப்பட்டுள்ளன. ஆக இப்படி கல்விக்கூடங்களை திறந்த காரணத்தினால் இந்தியாவிலேயே உயர்கல்வி படிப்பதில் முதல் மாநிலமாக தமிழ்நாடு விளங்கி கொண்டு இருக்கிறது.

கொரோனா நோய் தோற்றுக் காரணமாக அனைத்து பள்ளி மாணாக்கர்கள் தங்கள் கல்வியை தமிழக அரசால் 24 மணி நேரமும் ஒளிபரப்பப்படும் **"கல்வி தொலைக்காட்சி"** மூலமாகவும், இணைய வழி வகுப்புகள் மூலமாகவும் கற்று வருகிறார்கள். கல்லூரி மாணாக்கர்கள் **இணைய வகுப்புகளில் கலந்துக் கொள்வதற்கு வசதியாக 9.69 லட்சம் மாணாக்கர்களுக்கு நாள் ஒன்றுக்கு 2 GB data கட்டணமில்லாமல் மாண்புமிகு அம்மாவின் அரசால் வழங்கப்பட்டு வருகிறது.**

மாண்புமிகு அம்மாவின் அரசின் இந்த நடவடிக்கைகளினால் தமிழ்நாட்டில் மனிதவளம் மேம்பாடு அடைந்துள்ளது. இதன் விளைவாக 2010-11 ஆம் ஆண்டில் 32.9 விழுக்காடாக இருந்த உயர்கல்வி மாணவர் சேர்க்கை விகிதம் தற்போது 49 விழுக்காடாக உயர்ந்து, இந்தியாவிலேயே உயர்கல்வி படிப்பதிலே முதன்மை மாநிலமாக திகழ்கின்ற மாநிலம் தமிழ்நாடு என்பதை இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புகின்றேன்.

அரசு பணிக்கான வேலைவாய்ப்பில், திறமையான விளையாட்டு வீரர்களுக்கு 3 சதவீதம் இடஒதுக்கீடு மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் தலைசிறந்த விளையாட்டு வீரர்களுக்கு பணி நியமனம் வழங்கி, மாண்புமிகு அம்மாவின் அரசு விளையாட்டுத் துறைக்கு முக்கியத்துவம் அளிக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,**

சமூகப் பொருளாதார வளர்ச்சிக்கு, போக்குவரத்து வசதி என்பது உயிர் நாடி போன்றது. அதனை உணர்ந்த மாண்புமிகு அம்மாவின் அரசு, கடந்த 10 ஆண்டுகளில் 23,705 கி.மீ. நீளமுள்ள சாலைகளை அகலப்படுத்தும்/மேம்படுத்தும் பணிகள், 12013கி.மீ. நீளமுள்ள சாலைகளை புதுப்பிக்கும் பணிகள், 77 பாலப் பணிகள் மற்றும் 614 சிறு பாலங்கள் 17345.91 கோடி ரூபாய் மதிப்பீட்டில் முடிக்கப்பட்டுள்ளன.

போக்குவரத்து நெரிசலை குறைக்கும் பொருட்டு சென்னை, கோவை, சேலம் மற்றும் மதுரை ஆகிய மாநகரங்களில் 848.88 கோடி ரூபாய் மதிப்பீட்டில் முதல் அடுக்கு மற்றும் இரண்டடுக்கு மேம்பால பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

278 ஆற்றுப் பாலங்கள் 355.82 கோடி ரூபாய் மதிப்பிலும், 34 இரயில்வே மேம்பாலங்கள் / கீழ்பாலங்கள்/ வரையறுக்கப்பட்ட சுரங்கப்பாதை 1103 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும், 4 சாலை மேம்பாலங்கள் 244.10 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும் முடிக்கப்பட்டுள்ளன.

2265.74 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 4326.50 கி.மீ. நீளமுடைய 1620 ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகள் மாவட்ட இதர சாலைகளாக தரம் உயர்த்தப்பட்டன.

கோவை மாநகர், அவினாசி சாலையில் கோல்டுவின்ஸ் முதல் உப்பிலிபாளையம் வரை உயர்மட்டச் சாலை வழித்தடம் அமைக்கும் பணிக்கு 1,621.30 கோடி ரூபாய்க்கு ஒப்புதல் வழங்கப்பட்டு கட்டுமான பணிகள் நடைபெற்று வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,**

தமிழ்நாட்டின் முக்கிய தொழில் நகரமாக விளங்கும், சென்னை மாநகராட்சியின் போக்குவரத்து வசதியை மேம்படுத்தும் வகையில், மெட்ரோ ரயில் திட்டம் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டம் கட்டம் 1ன் கீழ், 18,380 கோடி ரூபாய் செலவில், 45.1 கி.மீ நீளத்திலான 2 மெட்ரோ இரயில் வழித்தடங்கள் முழுமையான பயன்பாட்டில் உள்ளன.

மேலும், வண்ணாரப்பேட்டை முதல் விம்கோ நகர் வரையிலான **9** கி.மீ கட்டம் **1**ன் நீட்டிப்பு வழித்தடத்தில் பயணிகள் சேவை விரைவில் துவங்க உள்ளது. **118.9** கி.மீ நீளத்திலான **3** மெட்ரோ இரயில் வழித்தடங்களை **61,843** கோடி ரூபாய் செலவில் செயல்படுத்துவதற்கான மெட்ரோ ரயில் கட்டம்**-II** திட்டத்திற்கு, **21.11.2020** அன்று மாண்புமிகு மத்திய உள்துறை அமைச்சர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது என்ற செய்தியை இந்த நேரத்திலே தெரிவிக்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!**

தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறையின் சார்பில் **2011** முதல் **2021** வரை பொதுமக்கள் பயன்பாட்டிற்காக **14,489** புதிய பேருந்துகள் **3,321.62** கோடி ரூபாய் செலவில் வாங்கப்பட்டு பொதுமக்கள் சேவைக்காக பயன்படுத்தப்பட்டு வருகிறது. இந்த காலக்கட்டத்தில் **1,532** புதிய வழித்தடங்களும் தொடங்கப்பட்டுள்ளன.

புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். பேருந்து நிலையம், கோயம்பேடு மற்றும் சுற்றியுள்ள பகுதிகளில், தமிழகத்தின் வெளி மாவட்டங்களிலிருந்து வரும் பேருந்துகளினால் அதிகரித்து வரும் போக்குவரத்து நெரிசலை தவிர்க்கும் பொருட்டு, தமிழகத்தின் தெற்கு பகுதிகளிலிருந்து வரும் பேருந்துகளுக்காக வண்டலூர் கிராமம், கிளாம்பாக்கத்தில் **88** ஏக்கர் பரப்பளவில் **314** கோடி ரூபாய் மதிப்பீட்டில் பேருந்து முனையம் கட்டுவதற்கான பணிகள் மார்ச் **2019**ல் தொடங்கப்பட்டு கட்டுமானப் பணிகள் முடிவடையும் நிலையில் உள்ளது. மேலும், மேற்கிலிருந்து வரும் பேருந்துகளுக்காக குத்தம்பாக்கம் கிராமம் திருமழிசையில் **25** ஏக்கர் பரப்பளவில் **307** கோடி ரூபாய் செலவில் புதிய பேருந்து முனையம் கட்ட பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!**

குடிநீர்த் திட்டங்களைப் பொறுத்தவரை, கடந்த **10** ஆண்டுகளில், **6,994** கோடி ரூபாய் செலவில் ஏற்படுத்தப்பட்ட புதிய **90** கூட்டு குடிநீர் திட்டங்கள் மூலம் கிராமப்புற மற்றும் நகர்ப்புற பகுதிகளில் உள்ள **1.57** கோடி மக்கள் பயன் பெறுகின்றனர்.

1,362 கோடி ரூபாய் செலவில் 85 நகராட்சி மற்றும் பேரூராட்சிகளில் பிரத்யேக குடிநீர் திட்டங்களின் மூலம் 49 லட்சம் மக்கள் பயன் பெறுகின்றனர்.

1,328 கோடி ரூபாய் செலவில் ஏற்படுத்தப்பட்ட 32 பாதாள சாக்கடை திட்டங்கள் மூலம் 214 மில்லியன் லிட்டர் கழிவு நீர் சுத்திகரிப்பு செய்யப்பட்டு 23.26 லட்சம் மக்கள் பயன்பெறுகின்றனர்

ஊரகப் பகுதிகளில் 6,686 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 3 லட்சத்து 97 ஆயிரம் குடிநீர் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன மற்றும் 508.18 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 11 லட்சத்து 43 ஆயிரத்து 557 வீடுகளுக்கு குடிநீர் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

சென்னை மாநகரின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்யும் பொருட்டு, 914.42 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நெம்மேலியில் 100 **MLD** சுத்திகரிப்பு திறன் கொண்ட கடல்நீரை குடிநீராக்கும் திட்டம் உட்பட 225 **MLD** அளவிற்கு புதிய நீராதாரங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

7,337.78 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 550 **MLD** சுத்திகரிப்பு திறன் கொண்ட 2 கடல்நீரை குடிநீராக்கும் திட்டங்கள் அமைப்பதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

சென்னையின் விரிவாக்கப்பட்ட 40 பகுதிகளில் குடிநீர் வழங்கல் திட்டங்கள் 1,260 கோடி ரூபாய் மதிப்பீட்டில் துவங்கப்பட்டு, 19 பகுதிகளில் முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. மேலும், 25 பகுதிகளில் பாதாள சாக்கடை திட்டங்கள் 1,286 கோடி ரூபாய் மதிப்பீட்டில் துவங்கப்பட்டு, 15 பகுதிகளில் முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.

தொழிற்சாலைகள் பயன்பாட்டிற்காக 834.21 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 45 **MLD** சுத்திகரிப்பு திறன் கொண்ட 2 மூன்றாம் நிலை கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. இதன் மூலம் **சென்னை மாநகரம் இந்தியாவிலேயே 20 விழுக்காடு கழிவுநீர் மறுசுழற்சி செய்யும் ஒரே நகரமாக திகழ்கிறது. 380 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கண்ணன்கோட்டை மற்றும்**

**தேர்வாய்க் கண்டிகை நீர்த்தேக்கம் அமைக்கப்பட்டு, சென்னை குடிநீர் தேவைக்கு வலு சேர்க்கப்பட்டுள்ளது.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே**

**"ஆயுதம் செய்வோம் நல்ல காகிதம் செய்வோம்**
**ஆலைகள் வைப்போம், கல்விச் சாலைகள் வைப்போம்"**

**என்ற மகா கவியின் பாடல் வரிகளுக்கு ஏற்ப, மாண்புமிகு அம்மாவின் அரசு எடுத்த நடவடிக்கைகளின் விளைவாக தமிழ்நாட்டில் ஒரு தொழிற்புரட்சியே ஏற்படுத்தப்பட்டுள்ளது.**

உலக முதலீட்டாளர் மாநாடு **2015**ல் பல்வேறு துறைகள் சார்பாக கையெழுத்திடப்பட்ட **98** புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மற்றும் குறு சிறு மற்றும் நடுத்தரத் தொழில் துறையில் கையெழுத்திடப்பட்ட **10,073** புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மூலம் உத்தரவாதம் அளிக்கப்பட்ட முதலீடு **2** லட்சத்து **42** ஆயிரத்து **160** கோடி ரூபாயாகும். இதன் மூலம் **4,70,065** நபர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்க வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டது.

இவற்றில் கடந்த **5** ஆண்டுகளில் **72** சதவிகித திட்டங்கள் செயல்பாட்டுக்கு வந்ததன் மூலம் **73,711** கோடி ரூபாய் முதலீடுகளும், **1,86,838** நபர்களுக்கு வேலை வாய்ப்பும் உறுதியளிக்கப்பட்டுள்ளது.

இந்த வரலாற்று சாதனையைத் தொடர்ந்து, இரண்டாவது உலக முதலீட்டாளர் மாநாடு **2019**ன் போது, **3** லட்சத்து **501** கோடி ரூபாய் முதலீட்டில் **10** லட்சம் நபர்களுக்கு வேலைவாய்ப்பை அளிக்கும் வகையில் **304** புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டன. இவற்றில் **24,492** கோடி ரூபாய் முதலீட்டில் **1,10,844** நபர்களுக்கு வேலைவாய்ப்பை உறுதியளித்துள்ள **81** திட்டங்கள், அதாவது **27** சதவீதத் திட்டங்கள், ஒரே ஆண்டில் தமது வணிக உற்பத்தியை துவங்கி சாதனை படைத்துள்ளன என்பதை மகிழ்ச்சியுடன் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் **2.20** லட்சம் கோடி முதலீட்டில் **5.33** லட்சம் நபர்களுக்கு

வேலைவாய்ப்பை உறுதியளித்துள்ள 191 திட்டங்கள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.

நான் மேற்கொண்ட வெளிநாட்டு பயணத்தின் மூலம் 41 நிறுவனங்களின் ரூபாய் 8 ஆயிரத்து 835 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான முதலீடுகளை, தமிழ்நாட்டுக்கு ஈர்த்து, 35,000க்கும் மேற்பட்ட நபர்களுக்கு, புதிய வேலைவாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சியை மேலும் சிறப்பாக்கும் பொருட்டு உலகெங்கும் வாழ்ந்து வரும் தமிழர்களின் சீரிய ஆலோசனைகளை பெறவும், தமிழ்நாட்டில் தொழில் துவங்க முன் வரும் வெளிநாடு வாழ் தமிழ் மக்களுக்கு இரத்தின கம்பளம் விரித்து வரவேற்கவும், **"யாதும் ஊரே"** என்ற புதிய திட்டத்தை கடந்த சட்டப்பேரவையில் நான் அறிவித்தேன். அதனை, நானே நேரடியாகச் சென்று அமெரிக்காவில் துவக்கி வைத்தேன்.

**மாண்புமிகு அம்மாவின் அரசு முனைப்போடு எடுத்து வரும் நடவடிக்கைகளின் காரணமாக, மும்பையைச் சார்ந்த, "ப்ராஜெக்ட்ஸ் டுடே" என்ற நிறுவனம், COVID காலத்திலும், புதிய முதலீட்டினை ஈர்த்து, புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கி உள்ளதில், தமிழ்நாடு, இந்தியாவிலேயே முதலிடத்தினை பெற்றுள்ளது என்று தனது ஆய்வில் குறிப்பிட்டு இருக்கிறது.**

நடப்பு ஆண்டில் மட்டும் 60,674 கோடி ரூபாய் முதலீட்டில் சுமார் 1,00,000 புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கிடும் வகையில் 73 புரிந்துணர்வு ஒப்பந்தங்களை இந்தக் கொரோனா காலத்தில் பெற்று கையெழுத்திடப்பட்டு சாதனைப் படைத்த அரசு மாண்புமிகு அம்மாவின் அரசு.

மேலும், DLF நிறுவனத்தின் 5,000 கோடி ரூபாய் முதலீட்டிலான தகவல் தொழில் நுட்ப பூங்கா திட்டம், 1500 கோடி ரூபாய் முதலீட்டில் அசன்டாஸ் ரேடியல் ஐ.டி. பார்க் திட்டம், 250 கோடி ரூபாய் முதலீட்டில் பட்டாபிராம் டைடல் பார்க் திட்டம், 250 கோடி ரூபாய் முதலீட்டில் ஸ்ரீபெரும்புதூர் வானூர்தி பூங்காவில் நவீன AEROHUB திட்டம் என பல திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

எனது தலைமையிலான உயர்நிலைக் குழு, ஒவ்வொரு முதலீட்டுத் திட்டத்தின் முன்னேற்றம் குறித்தும் தொடர்ந்து ஆய்வு செய்து, தேவையான வழிகாட்டுதல்களை வழங்கி வருகிறது. இதுமட்டுமின்றி, **39,941** கோடி ரூபாய் முதலீட்டிலான **62** பெரும் தொழில் திட்டங்களை, நானே நேரடியாக ஆய்வு செய்ததன் பயனாக, உடனுக்குடன் அவற்றுக்கு அனுமதிகள் வழங்கப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டில் தொழில் முனைவோருக்கும், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் முனைவோரின் நலனுக்காகவும் உரிய கடன் வசதி வழங்குவதற்காக மாநில அளவிலான வங்கி அதிகாரிகளின் கூட்டம் எனது தலைமையில் நடைபெற்றது. அதன் பயனாக தொழில் முனைவோர்களுக்கு **11,539.61** கோடி ரூபாய் அளவிற்கு கடன் வசதி வழங்கப்பட்டுள்ளது. இந்தியாவிலேயே தொழில் முனைவோருக்கு அதிக அளவில் கடன் உதவி அளித்த மாநிலம் தமிழ்நாடுதான்.

கொரோனா காரணமாக சர்வதேச போக்குவரத்து முடங்கியுள்ள சூழலில், தொழில் முதலீடுகள் தடையின்றி நடைபெற அரசு பல்வேறு நடவடிக்கைககளை மேற்கொண்டது. உலகெங்கும் உள்ள முதலீட்டாளர்கள், சிப்காட் தொழிற் பூங்காக்களில் உள்ள நிலங்களை, இருக்கும் இடத்திலிருந்தே இணைய வழியில் முப்பரிமாண அமைப்பில் பார்வையிடும் சிறப்பான வசதி இந்தியாவிலேயே முதல் முறையாக அறிமுகப்படுத்தியது தமிழ்நாடு அரசுதான். இதன் மூலம் நிலத்தின் தன்மை, சாலை உள்ளிட்ட உட்கட்டமைப்பு வசதிகள் என அனைத்தையும் விரிவாக ஆய்வு செய்து, நிலத்திற்கான விண்ணப்பத்தையும் இணைய வழியிலேயே அனுப்பிட இயலும்.

மாண்புமிகு அம்மாவின் அரசு எடுத்த நடவடிக்கைகளின் விளைவாக, தற்பொழுது அதிக அளவில் தொழில் முதலீடுகள் தமிழ்நாட்டை நோக்கி வந்துக் கொண்டிருக்கின்றன. எனவே, தமிழ்நாடு பொருளாதாரத்தில் தனது இயல்பு நிலையை வெகு விரைவில் அடைந்து தொடர்ந்து முன்னிலை வகிக்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!**

தற்போது, உடல் உழைப்பு தொழிலாளர் நல வாரியத்தின் கீழ், நலத்திட்ட உதவிகளை பெற்று வரும் 62,661 பட்டாசு மற்றும் தீப்பெட்டித் தொழிலாளர்கள் உட்பட சுமார் 4 லட்சம் பட்டாசு மற்றும் தீப்பெட்டித் தொழிலாளர்களின் நலனைக் கருத்தில் கொண்டு, பட்டாசு மற்றும் தீப்பெட்டித் தொழிலாளர்களுக்கு தனியே ஒரு அமைப்பு சாரா தொழிலாளர் நல வாரியம் அமைத்து, மாண்புமிகு அம்மாவின் அரசு, அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கு சமூக பாதுகாப்பு அளிப்பதில் நாட்டிலேயே முன்னோடி மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!**

சமீபத்தில் புதுக்கோட்டையிலிருந்து சென்ற இராமேஸ்வரம் பகுதியைச் சேர்ந்த 4 மீனவர்கள், இலங்கை கடற்படையினரால் தாக்கப்பட்டு உயிர் இழந்துள்ளனர். அந்த குடும்பங்களுக்கு நிவாரணமாக தலா 10 லட்சம் ரூபாய் வழங்க ஆணையிட்டேன். மேலும், அவர்களின் குடும்பத்தில் உள்ள ஒருவருக்கு விதிகளுக்கு உட்பட்டு தகுதியின் அடிப்படையில் அரசு வேலை வழங்க ஆணையிட்டுள்ளேன்.

இலங்கை கடற்படையினரால், தமிழ்நாட்டு மீனவர்கள் தாக்கப்பட்டதற்கு என்னுடைய கடுமையான கண்டனத்தை தெரிவித்து, இப்படிப்பட்ட நிகழ்வுகள் தொடரக் கூடாது எனவும், இதற்கு ஒரு நிரந்தர தீர்வு காண, மத்திய அரசு இதில் தலையிட்டு, இலங்கை அரசிடம் கலந்து பேசி ஒரு தீர்வு காணவேண்டும் என நான் மாண்புமிகு பாரத பிரதமர் அவர்களுக்கு நேரிலும், கடிதங்கள் வாயிலாகவும் தெரிவித்து உள்ளேன் என்பதை இந்த அவைக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நிலைமைக்கு மிக முக்கிய காரணம், கச்சத்தீவினை இலங்கைக்கு தாரை வார்த்து கொடுத்ததுதான். இதை செய்தவர்கள் யார் என்பது அனைவருக்கும் தெரியும், மாண்புமிகு உறுப்பினர் திரு.தமிமுன் அன்சாரி அவர்களுக்கும் தெரியும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!**

மாண்புமிகு அம்மாவின் அரசு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்காக பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. அவற்றில் சிலவற்றை இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

- ஆண்டுதோறும் 100 கோடி ரூபாய் செலவில், ஆதிதிராவிடர் குடியிருப்பு மேம்பாட்டுத் திட்டம். இதே திட்டத்திற்கு ஊரக வளர்ச்சித் துறை மூலம் 2,500 கோடி ரூபாய் செலவில் அடிப்படை வசதிகள் 22,695 குடியிருப்புகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.
- போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவி தொகை வழங்குவது குறித்து மாண்புமிகு அம்மாவின் அரசு மத்திய அரசுக்கு கொடுத்த அழுத்தத்தின் விளைவாகத்தான், தமிழ்நாடு அரசு தெரிவித்த கருத்துக்களின் அடிப்படையில் சமீபத்தில் மத்திய அரசு 60:40 என்ற பங்கீட்டு முறையை அறிவித்துள்ளது. இதனால் மத்திய அரசிடமிருந்து மாநில அரசுக்கு கிடைக்கும் நிதி ஆதாரம் அதிகரிக்கும்.

இதுபோன்ற எண்ணற்ற நலத் திட்டங்களை, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலனுக்காக மாண்புமிகு அம்மாவின் அரசு செயல்படுத்தி வருகின்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!**

மாண்புமிகு புரட்சித் தலைவர், எம்.ஜி.ஆர், மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா ஆகியோரைத் தொடர்ந்து மாண்புமிகு அம்மாவின் அரசும் சிறுபான்மையின மக்களுக்கு என்றும் அரணாக விளங்குகிறது.

நாட்டிலேயே முதல்முறையாக தமிழ்நாட்டு **கிறிஸ்துவர்கள் ஜெருசலேம் புனிதப் பயணம் மேற்கொள்ள நிதியுதவி** அளிக்கும் திட்டத்தை செயல்படுத்தியவர் மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். **அதற்கான நிதியுதவி தற்போது 20,000 ரூபாயிலிருந்து அவர்கள் வைத்த கோரிக்கையை ஏற்று, 37,000 ரூபாயாக மாண்புமிகு அம்மாவின் அரசால் உயர்த்தி அறிவிக்கப்பட்டிருக்கிறது என்ற செய்தியை இந்த நேரத்தில் தெரிவிக்க விரும்புகிறேன்.**

கிறிஸ்துவ தேவாலயங்களுக்கான புனரமைத்தல் மற்றும் பழுது நீக்குதலுக்காக வழங்கப்படும் மானியத்தை 1 கோடி ரூபாயிலிருந்து 5 கோடி ரூபாயாக உயர்த்தி வழங்கிய அரசு அம்மாவின் அரசுதான்.

**ஹஜ் பயணத்திற்கான மானியம் நிறுத்தப்பட்ட போதும், மாண்புமிகு அம்மாவின் அரசால் ஹஜ் மானியம் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது. அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, இது தற்போது 6 கோடி ரூபாயிலிருந்து 10 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.** பள்ளிவாசல்கள், தர்காக்கள் மற்றும் இதர வக்ஃப் நிறுவனங்களை பழுது பார்த்து புனரமைப்பதற்காக வழங்கப்படும் மானியத்தை இசுலாமியப் பெருமக்களின் கோரிக்கையை ஏற்று 60 லட்சம் ரூபாயிலிருந்து 5 கோடி ரூபாயாக உயர்த்தியதும் மாண்புமிகு அம்மாவின் அரசுதான். சென்னையில் ஹஜ் இல்லம் கட்டும் பணிக்கு 15 கோடி ரூபாயினை ஒதுக்கீடு செய்ததும் மாண்புமிகு அம்மாவின் அரசுதான், பணிகள் ஆரம்ப கட்டத்தில் உள்ளன. மேலும் நாகூர் தர்கா குளத்தின் சுற்றுச்சுவர் சீரமைக்க ரூ.4.34 கோடி ஒதுக்கீடு செய்ததும் மாண்புமிகு அம்மாவின் அரசுதான்.

தமிழ்நாட்டில் வாழும் தெலுங்கு, மலையாளம், கன்னடம், உருது, சௌராஷ்டிரம், மராட்டியம் பேசும் மொழிசிறுபான்மையினரின் நலனில் அக்கறை கொண்ட மாண்புமிகு அம்மாவின் அரசு **"தமிழ்நாடு மொழிவழி சிறுபான்மையினர் சமூக, பொருளாதார மேம்பாட்டு கழகத்தினை"** உருவாக்கி, அம்மக்களின் சமூக பொருளாதார மேம்பாட்டிற்கு வழிவகை செய்ததும் மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மாவின் அரசுதான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,**

தமிழ்நாட்டில் தைப்பூசம் முக்கிய பண்டிகையாக கொண்டாடப்பட்டு வருகிறது. பல்வேறு தரப்பினரிடம் இருந்து வரப்பெற்ற கோரிக்கையின் அடிப்படையில், தைப்பூச திருநாளை அரசு பொது விடுமுறையாக அறிவித்ததும் மாண்புமிகு அம்மாவின் அரசு என்பதை பெருமையோடு நான் இந்த நேரத்தில் தெரிவிக்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,**

தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு நன்கு பேணி காக்கப்பட்டு, தமிழ்நாடு ஒரு அமைதி பூங்காவாக திகழ்ந்து வருகிறது.

மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில், இந்தியாவிலேயே முதன்முதலாக **பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கெதிரான குற்றத் தடுப்பு பிரிவு** ஒரு முன்னோடித் திட்டமாக தமிழ்நாட்டில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசால் உருவாக்கப்பட்டு, சிறந்த முறையில் செயல்பட்டு வருகிறது. அதுமட்டுமின்றி, பெண்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பினை உறுதி செய்வதற்காக **காவலன் செயலி**, **மகளிர் உதவி எண் 181**, **குழந்தைகளுக்கான உதவி எண் 1098** போன்றவையும் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு, குற்றங்கள் வெகுவாக தடுக்கப்பட்டுள்ளன. இந்திய நகரங்களிலேயே சென்னை மாநகரில், அதிகமாக சிசிடிவி கேமராக்கள் நிறுவப்பட்டு, குற்றச் செயல்கள் வெகுவாக குறைக்கப்பட்டுள்ளன.

பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களுக்கான தண்டனையை மேலும் கடுமையாக்க, இந்திய தண்டனை சட்டத்தில் திருத்தங்கள் கொண்டு வர மாண்புமிகு அம்மாவின் அரசு தொடர் நடவடிக்கை எடுத்து வருகிறது.

சமீபத்தில் முத்தூட் பைனான்ஸ், லலிதா ஜுவல்லரி கொள்ளை மற்றும் மயிலாடுதுறையில் நடந்த கொலை ஆகிய வழக்குகளில் மிகத் துரிதமாக செயல்பட்டு, தமிழ்நாடு காவல்துறை குற்றவாளிகளை கண்டுபிடித்தது அனைவரின் பாராட்டையும் பெற்றது. சிறந்த உட்கட்டமைப்பை உருவாக்குவதாலும், போக்குவரத்து காவல்துறையின் சிறப்பான செயல்பாடுகளினாலும், தமிழ்நாடு தொடர்ந்து நாட்டிலேயே விபத்துகளை வெகுவாக குறைக்கும் சிறந்த மாநிலமாக இன்றையதினம் விளங்கி வருகிறது.

இந்தியாவிற்கே முன்னோடியாக காவலர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களின் மன நலன் காக்கும் “**காவலர் நிறைவாழ்வு பயிற்சி**” என்னும் திட்டத்தை 10 கோடி ரூபாய் செலவில் மாண்புமிகு அம்மாவின் அரசு

செயல்படுத்தியது. இதன் மூலம், 95,000 காவலர்களும், காவலர் குடும்பங்களும் பயனடைந்தது குறிப்பிடத்தக்கது.

காவலர் நலனில் பெரிதும் அக்கறை கொண்டுள்ள மாண்புமிகு அம்மாவின் அரசு, காவல் ஆளிநர்கள் மற்றும் அவர்தம் குடும்பத்தினருக்கான உயரிய மருத்துவ தேவைகளைக் கருத்தில் கொண்டு, அவர்களுக்கு அனைத்து வகையான உயரிய சிகிச்சை, அறுவை சிகிச்சைகள் போன்றவற்றை அளித்திட ஏதுவாக, **சென்னையில் உள்ள காவல் மருத்துவமனையை, அனைத்து பிரதான மருத்துவ துறைகளையும் உள்ளடக்கிய முழுத்திறன் கொண்ட மருத்துவமனையாக மேம்படுத்தப்படும் என்பதை இப்பேரவைக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.**

**காவல் ஆளிநர்களின் குழந்தைகளுக்கு நல்ல தரமான கல்வி கிடைக்க ஏதுவாக, சென்னையில் ஏற்கனவே காவல் உறைவிடப்பள்ளி ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அதைப்போன்றே, திருச்சி, கோயம்புத்தூர், மதுரை, திருநெல்வேலி, சேலம், கடலூர் மற்றும் வேலூர் ஆகிய இடங்களில் காவல் உறைவிடப் பள்ளிகள் உருவாக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,**

என்னால் முதலமைச்சரின் சிறப்பு குறை தீர்க்கும் திட்டம் 19.8.2019 அன்று தொடங்கப்பட்டு, இதுவரை 9,77,638 மனுக்கள் பொதுமக்களிடமிருந்து பெறப்பட்டு, இதில் 5,22,812 மனுக்கள் ஏற்கப்பட்டுள்ளன. இவற்றில் சமூக பாதுகாப்புத் திட்டத்தின் மூலம் 1,44,348 நபர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது.

பொதுமக்களின் குறைகளை உடனுக்குடன் பதிவு செய்து, அவற்றிற்குத் தீர்வு காண, ஒரு குறைதீர்ப்பு மேலாண்மைத் திட்டம் அமைப்பதன் அவசியத்தை உணர்ந்து, 12.78 கோடி ரூபாய் செலவில் **“முதலமைச்சரின் உதவி மையம் மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட குறைதீர்ப்பு மேலாண்மைத் திட்டம்”** ஒன்றை அரசு செயல்படுத்த உள்ளது. இதனால் பல்வேறு அரசுத் துறைகள் தொடர்பான குறைகளை மனுதாரர் ஒரே தளத்தில் பதிவேற்றம் செய்து உடனடியாக அது

பரிசீலிக்கப்பட்டு, விரைந்து தீர்வு காணப்பட உள்ளது. **இத்திட்டத்தை நான் விரைவில் துவக்கி வைக்க உள்ளேன் என்பதை இந்த நேரத்தில் தெரிவிக்க விரும்புகிறேன்.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,**

திறன் பயிற்சி பெற்ற இளைஞர்கள் மற்றும் முக்கிய வேலையளிக்கும் நிறுவனங்கள் பயன் பெறும் வகையில் மாநில அளவில் ஒருங்கிணைக்கப்பட்ட திறன் பதிவு தொகுதியாக செயல்படக்கூடிய, தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் மேம்படுத்தப்பட்ட இணையதளத்தை 19.9.2020 அன்று நான் துவக்கி வைத்தேன்.

தமிழ்நாட்டில் வேலை நாடும் இளைஞர்களையும், வேலை அளிக்கும் தனியார் துறை நிறுவனங்களையும், இணைய வழியாக இணைத்து வேலைவாய்ப்புகளை பெற்றுத் தரும் நோக்கத்தில், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி துறையின், வேலைவாய்ப்பு பிரிவால் பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்ட '**தமிழ்நாடு தனியார் துறை வேலை இணையம்' 'Tamil Nadu Private Job portal' (www.tnprivatejobs.tn.gov.in)** என்ற இணையதளத்தை 16.6.2020 அன்று நான் துவக்கி வைத்தேன். இவ்விணையதளம் வாயிலாக **14,167** வேலைநாடுநர்கள் பணி நியமனம் பெற்றுள்ளனர்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,**

தமிழர்களின் வரலாற்றுத் தொன்மையை பறைசாற்றும் கீழடியில், கண்டெடுக்கப்பட்ட தொல்பொருட்களை காட்சிப்படுத்த 12.21 கோடி ரூபாய் செலவில் சிவகங்கை மாவட்டம், கொந்தகை கிராமத்தில் '**அகழ் வைப்பகம்**' என்னால் அடிக்கல் நாட்டப்பட்டு, கட்டப்பட்டு வருகிறது. ஹார்வர்டு பல்கலைக்கழகம், ஹுஸ்டன் பல்கலைக்கழகம் ஆகியவற்றில் தமிழ் இருக்கைகள் நிறுவ தமிழ்நாடு அரசு நிதி உதவி அளித்து, தமிழ் ஆராய்ச்சிக்கு வித்திட்டுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,**

குடிசை இல்லா தமிழ்நாட்டை உருவாக்க, தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம், பல்வேறு வீட்டு வசதி மேம்பாட்டுத் திட்டங்கள் மற்றும் சமுதாய நலப் பணிகளை செயல்படுத்தி வருகின்றது. கடந்த 10 ஆண்டுகளில் 3.36 லட்சம் அடுக்கு மாடி குடியிருப்புகள் மற்றும் வீடுகள் 11,011 கோடி ரூபாய் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் கீழ், ரூ.4,436.24 கோடி செலவில் 33,575 புதிய வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 4,679.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 23,502 வீடுகளுக்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், அனைவருக்கும் வீடு திட்டத்தின் கீழ் நகர்ப்புறங்களில் குடிசைகளில் வசிக்கும் மக்களுக்காக 23,426.41 கோடி ரூபாய் செலவில் 4,72,401 வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,**

முதலமைச்சரின் சூரியமின் சக்தியுடன் கூடிய பசுமை வீடு திட்டத்தின் கீழ் 4,00,000 வீடுகள் 8,119.22 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் எடுக்கப்பட்டு, இதுவரை 3,75,416 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டத்தின் (ஊரகம்) கீழ் 2016–17 முதல் 2019–20 வரை 5,73,340 வீடுகள் 9,746.78 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் எடுக்கப்பட்டு, இதுவரை 3,21,849 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

“தானே” வீடு கட்டும் திட்டத்தின் கீழ் 90,000 வீடுகள் 900 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் எடுக்கப்பட்டு கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

அரசு திட்டங்களின் கீழ் கட்டப்பட்ட வீடுகளை பராமரிப்பு செய்தல் திட்டத்தின் கீழ் 2018–19ம் ஆண்டில் 45,594 வீடுகள் 227.97 கோடி ரூபாய் மதிப்பீட்டில் எடுக்கப்பட்டு, அனைத்து பணிகளும் செய்து முடிக்கப்பட்டுள்ளன.

மாண்புமிகு அம்மாவின் அரசு, ஏழை, எளிய மக்களின் கனவான குடியிருப்பு வீடு கட்டுவதை உறுதிப்படுத்தும் வகையில், தமிழ்நாடு அரசால் மேற்கூரை அமைக்க வழங்கப்பட்டு வந்த, 50,000 ரூபாயை உயர்த்தி, 1,20,000 ரூபாயாக வழங்க உத்தரவிட்டுள்ளேன். இதனால், பிரதம மந்திரி ஊரக குடியிருப்புத் திட்டத்தின் கீழ்,

ஒவ்வொரு வீட்டிற்கும் வழங்கப்படும் அலகுத் தொகை **1,70,000** ரூபாயிலிருந்து **2,40,000** ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,**

கோவிட்-19 பெருந்தொற்று நோயாலும், அதன் பரவலைக் கட்டுப்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கைகளாலும், பொருளாதார வளர்ச்சி குறைந்த நிலையில், **2020–21**ஆம் நிதியாண்டு தொடங்கியது. வருவாய் வரவினங்கள் கடுமையாகக் குறைந்து, கூடுதல் செலவினங்களின் பெரிய அளவில் ஏற்பட்ட, இந்த கடினமான காலக்கட்டத்தில் நிதி நிலைமையை அரசு நேர்த்தியாக நிர்வகித்தது. கோவிட்-19 மீட்டெடுப்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகள், சுகாதார உட்கட்டமைப்புகளை மேம்படுத்துதல் மற்றும் மூலதனப் பணிகளின் செலவினங்கள் ஆகியவற்றிற்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு அச்செலவினங்கள் அதிகரிக்கப்பட்டன. தனது சொந்த நிதி ஆதாரங்களிலிருந்து, கோவிட்-19 நிவாரணம் மற்றும் மீட்டெடுப்பு நடவடிக்கைகளுக்காக தமிழ்நாடு அரசு இதுவரை **7,604.80** கோடி ரூபாய் செலவிட்டுள்ளது.

மருத்துவ சாதனங்கள் கொள்முதலுக்காக **913.16** கோடி ரூபாய், மருத்துவ கட்டுமான பணிகளுக்காக **159.75** கோடி ரூபாய், பணியாளர் செலவுகளுக்காக **454.08** கோடி ரூபாய், பொது கொரோனா மேலாண்மை மற்றும் நலப்பணிகளுக்காக **735.39** கோடி ரூபாய், தேசிய சுகாதார இயக்கத்தின் மாநில பங்களிப்பாக **32** கோடி ரூபாய், தனிமைப்படுத்துதல் செலவினமாக **262.25** கோடி ரூபாய், புலம்பெயர் தொழிலாளர்களுக்காக **143.87** கோடி ரூபாய், பொது விநியோகத் திட்டத்தின் கீழ் **1,727.63** கோடி ரூபாய் மற்றும் ரொக்க நிவாரணமாக **3,176.67** கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளது. ஆக மொத்தம், தமிழ்நாடு அரசு கோவிட்-19 சிகிச்சை மற்றும் நிவாரணப் பணிகளுக்காக **7,604.80** கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து, செலவினம் மேற்கொண்டுள்ளது.

மேற்கூறிய செலவினங்களில் மாநில அரசின் நிதி ஆதாரங்களிலிருந்து **5,364.24** கோடி ரூபாயும், மாநில பேரிடர் மேலாண்மை நிதியிலிருந்து **2,087.14** கோடி ரூபாயும், தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை ஆணையம் மற்றும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து **153.42** கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கொரோனா நோய்த் தொற்றினால் ஏற்படும் நிதி நெருக்கடியை சமாளிக்க மாநில அரசுகள் சில சீர்த்திருத்தங்களை மேற்கொண்டால் கூடுதல் சந்தைக் கடனுதவியை பெறலாம் என மத்திய அரசு ஒரு திட்டத்தை அறிவித்தது. மிகவும் பாதிப்படைந்த மாநிலப் பொருளாதாரம் மேலும் நலிவடையும் என்றும், இந்நேரத்தில் கடன் வாங்குவதைத் தவிர வேறு வழியில்லை எனவும், கடன் வாங்குவதை பற்றி தயங்கும் நேரம் இதுவல்ல எனவும் பொருளாதார நிபுணர்களும் தங்கள் கருத்துக்களை தெரிவித்து இருந்தனர்.

அதன்படி. இதுவரை **28,880** கோடி ரூபாய் மத்திய அரசிடமிருந்து, தமிழக அரசு கடனாக பெற்றுள்ளது. உரிய நேரத்தில், குறைந்த வட்டியில் கடன்களை பெற்றதன் மூலம், கோவிட்-19 பெருந்தொற்று நோயின் கடுமையான தாக்கத்திலிருந்து தமிழ்நாட்டு மக்களை இவ்வரசு பாதுகாத்துள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,**

மத்திய அரசின் சீர்மிகு நகரத் திட்டத்தின் கீழ், நாட்டிலேயே அதிகபட்சமாக **11** நகரங்களில் இத்திட்டத்தினை செயல்படுத்த ஒப்புதல் பெற்று, **11** ஆயிரம் கோடி ரூபாயில் **579** பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு, **174** பணிகள் முடிவடைந்தும், **298** பணிகள் நடைபெற்றும் வருகின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,**

**இந்தியாவிலேயே ஆளுமை மிக்க முதல் மாநிலமாக** மத்திய அரசால் தமிழ்நாடு தேர்வு செய்யப்பட்டுள்ளது.

- தமிழ்நாட்டின் ஆளுமையை பாராட்டி, **“இந்தியா டுடே”** தொடர்ந்து மூன்று ஆண்டுகளாக சிறந்த மாநிலத்திற்கான விருதினை தமிழ்நாட்டிற்கு வழங்கி வருகிறது என்பதை இந்த நேரத்திலே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.
- தேசிய அளவில் **நீர் மேலாண்மையில் சிறந்த மாநிலத்திற்கான விருதினை தமிழ்நாட்டிற்கு** மத்திய ஜல் சக்தி துறை வழங்கியுள்ளது. நீர்நிலைகளை புதுப்பித்தலில் வேலூர், கரூர் மாவட்டங்கள், முதல் இரு இடங்களையும் நீர்நிலைகளை பாதுகாப்பதில் பெரம்பலூர் மாவட்டம் இரண்டாம் இடத்தையும் பெற்றுள்ளன.
- உடல் உறுப்பு தானத்தில் இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக தமிழ்நாடு தேர்வு செய்யப்பட்டு, மத்திய அரசின் விருதை தொடர்ந்து 6 முறை பெற்றுள்ளது.
- டிஜிட்டல் ஆளுமையில் சிறந்த மாநிலம் என்ற பிரிவில் மத்திய அரசின் “**டிஜிட்டல் இந்தியா-2020 தங்க விருதை”** இந்த ஆண்டு தமிழ்நாடு அரசு பெற்றுள்ளது.
- ‘பெண் குழந்தைகளை காப்போம், பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம்’ திட்டத்தில், தமிழ்நாடு முதன்மை மாநிலமாக தேர்வு செய்யப்பட்டு, மத்திய அரசின் விருதை பெற்றது. அதேபோன்று, மூத்த குடிமக்களுக்கு சிறப்பாக சேவையளிக்கும் முதல் மாநிலத்திற்கான மத்திய அரசின் விருதையும் தமிழ்நாடு அரசு பெற்றுள்ளது.
- பெங்களூரில் உள்ள பொது விவகார மையம் வெளியிட்டுள்ள அறிவிப்பில் தமிழ்நாடு இரண்டாவது **சிறந்த மாநிலமாக** தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.
- தேசிய தர உறுதித் திட்டத்தின் கீழ், சிறந்த செயல்பாடுகளுக்காக தமிழ்நாட்டில் உள்ள 26 அரசு மருத்துவமனைகளுக்கும் மற்றும் 47 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் மத்திய அரசால் பாராட்டு சான்றிதழ் மற்றும் பரிசுத் தொகையும் வழங்கப்பட்டுள்ளது.

- மேலும், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதி திட்டத்திற்கு விருதுகள், பொது விநியோக திட்டத்தை கணினி மயமாக்கியதில் விருது, புதுப்பிக்கப்பட்ட எரிசக்தித் துறைக்கு விருது, தரமான மருத்துவ சேவைக்கான விருதுகள், போக்குவரத்து கழகங்களுக்கும், நகராட்சிகளுக்கும் சிறந்த முறையில் பணியாற்றியதற்காக விருதுகள், ஊரக வளர்ச்சித் துறைக்கு அதிக அளவில் விருதுகள் என பல்வேறு விருதுகளை மாண்புமிகு அம்மாவின் அரசு பெற்று தமிழ்நாடு ஒரு சிறந்த மாநிலம் என்ற பெருமையைப் பெற்றுள்ளது.
- இதுபோன்ற எண்ணற்ற விருதுகளை தமிழ்நாட்டின் ஒவ்வொரு துறையும், மத்திய அரசிடமிருந்தும், பல்வேறு பொது நிறுவனங்களிடமிருந்தும் பெற்று, விருதுகள் பெறும் மாநிலமாக தமிழ்நாடு தொடர்ந்து சாதனை படைத்து வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!**

நான் கடந்த 16.2.2017 அன்று, முதலமைச்சராக பொறுப்பேற்றுக் கொண்டேன். எதிர்கட்சியினர் மற்றும் சிலர் இந்த ஆட்சி சில தினங்கள் நிலைக்குமா? எடப்பாடி தலைமையில் அமைக்கப்பட்ட ஆட்சி 3 மாதம் அல்லது 6 மாதம் நிலைக்குமா? என்றெல்லாம் எதிர்க்கட்சித் தலைவர் உட்பட பல எதிர்க்கட்சியை சேர்ந்தவர்கள் எல்லாம் பேசிக் கொண்டு இருந்தார்கள்.

ஆனால் மாண்புமிகு **புரட்சித்தலைவி அம்மா** அவர்கள், **எனக்குப் பின்னாலும் இன்னும் எத்தனை நூற்றாண்டுகள் வந்தாலும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் மக்களுக்காகவே இயங்கும்** என்று சூளுரைத்ததை நிறைவேற்றும் வண்ணம், **மக்கள் பணியை சிறப்பாக செய்த காரணத்தினால், வரும் 15.2.2021 அன்று 4 ஆண்டுகளை நிறைவு செய்து 5–ஆம் ஆண்டில் அடியெடுத்து வைக்க இருக்கிறோம் என்பதை மகிழ்ச்சியுடன் கூற விரும்புகின்றேன்.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!**

இன்று சிலர் இந்த ஆட்சியை நிராகரிக்க வேண்டும் என்று உண்மைக்குப் புறம்பான பிரச்சாரம் செய்து வருகிறார்கள். ஆனால், தமிழ்நாட்டு மக்களோ, **இந்த ஆட்சியே தொடரவேண்டும் என விரும்புகின்றனர். ஏனெனில்,**

- காவேரி பிரச்சனையில் தமிழ்நாட்டின் உரிமையை நிலைநாட்டி, **காவேரி மேலாண்மை ஆணையம் மற்றும் காவேரி நதிநீர் முறைப்படுத்தும் குழு** ஆகியவற்றை அமைத்த அரசு மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மாவின் அரசு.
- முல்லைப் பெரியார் அணையின் நீர்மட்ட உயர்த்திக் காட்டிய அரசு மாண்புமிகு அம்மாவின் அரசு.
- 20 ஆண்டுகளாக ஜெனரேட்டர் மூலமாகத் தான் முல்லை பெரியாறு அணை இயக்கப்பட்டு வந்தது. 20 ஆண்டுகளுக்குப் பிறகு முல்லை பெரியாறு அணையின் செயல்பாட்டிற்கு கேரள அரசிடமிருந்து மீண்டும் மின்சாரத்தை பெற்று அதை இயக்கிய அரசு மாண்புமிகு அம்மாவின் அரசு.
- ஏழை பெண்களின் திருமணத்திற்கு தாலிக்கு தங்கம் வழங்கியது மாண்புமிகு அம்மாவின் அரசு.
- உழைக்கும் மகளிருக்கு மானியத்துடன் இரண்டு சக்கர வாகனங்கள் வழங்கி மாண்புமிகு அம்மாவின் திட்டத்தை நிறைவேற்றியது மாண்புமிகு அம்மாவின் அரசு.
- மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு 81,052 கோடி ரூபாய் கடன் உதவி வழங்கி, மகளிர் சொந்தக்காலில் பொருளாதாரத்தை ஈட்ட உதவி வழங்கிய அரசு, மாண்புமிகு அம்மாவின் அரசு.
- அம்மா உணவகங்கள் மூலம் தரமான உணவை குறைந்த விலையில் வழங்குவது மாண்புமிகு அம்மாவின் இலட்சியம், அதை மாண்புமிகு அம்மாவின் அரசு நிறைவேற்றி வருகிறது.

- மாணாக்கர்களுக்கு விலையில்லா மடிக்கணினி, மிதிவண்டி, மற்றும் டேட்டா கார்டு வழங்கி, மாணவர்கள் சமுதாயத்தை உயர்த்திய அரசு மாண்புமிகு அம்மாவின் அரசு.
- அரசுப் பள்ளி மாணாக்கர்களுக்கு மருத்துவ படிப்பில் 7.5 விழுக்காடு உள் ஒதுக்கீடு வழங்கி, ஏழை மாணாக்கர்களின் மருத்துவ கனவை நனவாக்கிய அரசு மாண்புமிகு அம்மாவின் அரசு.
- ஒரே ஆண்டில் 11 புதிய அரசு மருத்துவக் கல்லூரிகளை நிறுவி வரலாற்று சாதனை படைத்த அரசு மாண்புமிகு அம்மாவின் அரசு.
- அதிகளவில் பள்ளிகள், கல்லூரிகள், மருத்துவக் கல்லூரிகளை துவக்கி கல்வி கற்கக்கூடியவர்களின் எண்ணிக்கையில் உயர்ந்த மாநிலம் தமிழ்நாடு என்ற பெருமையைப் பெற்ற அரசு, மாண்புமிகு அம்மாவின் அரசு.
- இருளில் தத்தளித்த தமிழ்நாட்டை, மின்மிகை மாநிலமாக மாற்றி, இன்றைக்கு தடையில்லா மின்சாரத்தை தமிழ்நாட்டு மக்களுக்கு வழங்குகிற அரசு மாண்புமிகு அம்மாவின் அரசு.
- வியக்கத்தகு திட்டங்கள் மூலம் தமிழ்நாட்டை நீர் மிகை மாநிலமாக மாற்றி வருகிறது மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மாவின் அரசு.
- அதிகளவில் தொழில் முதலீடுகளை ஈர்த்து, இளைஞர்களின் வேலைவாய்ப்பினை பெருக்குவதற்கு முன்னுரிமை அளித்தது மாண்புமிகு அம்மாவின் அரசு.
- உலகமே பாராட்டும் வகையில், கொரோனா தொற்று நோயை கட்டுப்படுத்தி மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களே தமிழ்நாட்டை பெருமைபடுத்துகிற அளவிற்கு, பாராட்டிச் பேசி, நற்பெயர் பெற்ற அரசு மாண்புமிகு அம்மாவின் அரசு.
- ஜல்லிகட்டு உரிமையை மீட்டெடுத்து தென்மாவட்ட மக்களின் நீண்ட நாள் கனவை நிறைவேற்றிய அரசு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மாவின் அரசு.

- டெல்டா விவசாயிகளின் நலனுக்காக பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலம் அமைத்து டெல்டா பாசன விவசாயிகளின் கனவை நனவாக்கிய அரசு மாண்புமிகு அம்மாவின் அரசு.
- குடிமராமத்துத் திட்டத்தின் மூலம் உணவு உற்பத்தியில் புரட்சி செய்து, ஏரிகள், குளங்கள், குட்டைகள் அனைத்தையும் தூர்வாரிய காரணத்தால் பருவ காலங்களில் பொழிந்த மழைநீர் ஒரு சொட்டுகூட வீணாகாமல் சேமித்த அரசு மாண்புமிகு அம்மாவின் அரசு.
- பயிர் காப்பீட்டு திட்டத்தின் மூலம் விவசாயிகளுக்கு இந்தியாவிலேயே அதிக அளவில் இழப்பீட்டுத் தொகையை பெற்றுத் தந்த அரசு மாண்புமிகு அம்மாவின் அரசு.
- பால் உற்பத்தியை என்றைக்கும் நினைக்க முடியாத அளவிற்கு அதிகளவில் பெருக்கி சாதனை படைத்த அரசு மாண்புமிகு அம்மாவின் அரசு.
- பொதுமக்களின் வசதிக்காக, பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று **6** புதிய மாவட்டங்களை உருவாக்கி தந்த அரசும் அம்மாவின் அரசு தான்.

இதுபோன்று எண்ணற்ற திட்டங்களை செயல்படுத்தியது மாண்புமிகு அம்மாவின் அரசு. இவையெல்லாம் ஒரு சில துளிகள் தான்.

**அதுமட்டுமல்லாமல், வறட்சிப் பகுதிகள் பயன்பெற அத்திக்கடவு–அவினாசி திட்டம், குண்டாறு–காவேரி இணைப்புத் திட்டம், கீழ்பவானி மேம்பாட்டுத் திட்டம், நீர்வளத்தைப் பெருக்க ஆறுகளின் குறுக்கே ஆதனூர்–குமாரமங்கலம், நஞ்சைப்புகளூர் என பல இடங்களில் தடுப்பணைகள் உள்ளிட்ட எண்ணற்ற வளர்ச்சித் திட்டங்களை செயல்படுத்தி வருவதுடன், நிதி தொழில்நுட்ப நகரம், சென்னையில் புதிய விமான நிலையம், காவேரி மேம்பாட்டுத் திட்டம், தாமிரபரணி–வைப்பாறு திட்டம், ஒருங்கிணைந்த சுற்றுலா மேம்பாட்டுத் திட்டம், சென்னை ஒருங்கிணைந்த வாகன நிறுத்தத் திட்டம்** என **பல வளர்ச்சித் திட்டங்கள் செயல்படுத்த திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.** அவைகள் அனைத்தும் வரும் காலங்களில் செயல்படுத்தப்பட உள்ளன.

**நான் செல்லும் இடங்கள் எல்லாம் அலைகடலென கூடும் மக்கள் இத்திட்டங்களையெல்லாம் பாராட்டுகின்றனர். இந்த ஆட்சி தொடர வேண்டுமென்று மக்கள் விரும்புகிறார்கள், மக்களின் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு.**

**மாண்புமிகு அம்மாவின்** அரசு மூன்றாம் முறையாக பதவியேற்று ஹாட்ரிக் நிகழ்த்தி, மேன்மேலும் எண்ணற்ற நலத்திட்டங்களை தொடர்ந்து செயல்படுத்தி, தமிழ்நாட்டை தொடர்ந்து முன்னேற்ற பாதையில் எடுத்துச் செல்லும் என்பதில் எள்ளளவும் சந்தேகம் இல்லை. நான் செல்லும் இடங்களில் எல்லாம் மக்கள் வழங்கும் பேராதரவே இதற்குச் சான்று. மக்கள் மனங்களில் இன்றும் வாழும் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆன்மா எங்களுக்கு என்றும் துணை நிற்கும்.

சட்டமன்ற தேர்தல் முடிந்த பிறகும், சட்டமன்றத்தில் தற்போது இருக்கின்ற இருக்கை நிலையே தொடரும். ஆளும் கட்சி வரிசையில் இருக்கும் நாங்கள் தொடர்ந்து இந்த இடத்திலேயே இருப்போம். எதிர்கட்சியினர் தொடர்ந்து அவர்கள் இருக்கின்ற இருக்கையிலேயே இருப்பார்கள் என்பதை நான் உறுதியாக தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்களின் எண்ணங்கள் நிறைவேறும் என்று நான் கருதுகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்களின் கருத்துக்களுக்கு உரிய பதிலுரையை நான் அளித்திருக்கிறேன் என நம்புகிறேன். அவர்களது கோரிக்கைகள் எதாவது விடுபட்டிருப்பின், அதையும் அரசு கவனத்தில் எடுத்துக் கொண்டு விதிகளின்படி உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதை தெரிவித்துக் கொண்டு, இந்த இனிய நேரத்தில், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், தமிழ்நாட்டு மக்கள் அனைவருக்கும் எனது நன்றியை தெரிவித்துக் கொண்டு, மாண்புமிகு ஆளுநரின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை ஒருமனதாக நிறைவேற்றித் தருமாறு அன்புடன் கேட்டு நிறைவு செய்கின்றேன்.

நன்றி! வணக்கம்.

---

கடந்த 2017–ஆம் ஆண்டு ஜல்லிக்கட்டுக்கு அனுமதி கோரி தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் போராட்டங்கள் நடைபெற்றன. ஜல்லிக்கட்டுப் போராட்டம் தமிழ்நாட்டு மக்களின் உரிமையை நிலைநாட்ட நடத்தப்பட்ட உணர்வுப்பூர்வமான போராட்டம். இந்தப் போராட்டத்தின்போது பதியப்பட்ட வழக்குகளில் பலர் தங்கள் உணர்வுகளை வெளிப்படுத்தவே போராடினர். இந்தப் போராட்டங்களின்போது, சட்டம்–ஒழுங்கினை பராமரித்திட பல்வேறு வழக்குகள் பதியப்பட்டன. எனினும் சில விரும்பத் தகாத சம்பவங்கள் இந்தப் போராட்டங்களின்போது நடந்து விட்டன. இந்த வழக்கிற்குள் உணர்வுப்பூர்வமாக போராடிய மக்களும் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதை கருத்தில்கொண்டு, இந்தப் போராட்டங்களின்போது பதியப்பட்ட வழக்குகளில் காவலர்களை தாக்கியது, தீ வைப்பு போன்ற சட்டபூர்வமாக திரும்பப் பெற முடியாத ஒரு சில வழக்குகளைத் தவிர மற்ற வழக்குகளை, சட்ட வல்லுநர்கள் ஆலோசனையைப் பெற்று, எனது தலைமையிலான அம்மாவின் அரசு திரும்பப்பெறும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

* * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9